வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 05.08.2022 வெள்ளிக்கிழமை | இதழ் : 241 | பக்கங்கள் : 16

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria ரியா பணப்பரிமாற்றம்
Western Union வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# தனக்கு எதிரான எம்.பிக்களை ஒதுக்கி வைக்கின்றார் ரணில்!



## கலக்கத்தில் மகிந்த தரப்பினர்

கொழும்பு, ஒகஸ்ட் 05

தனக்கு எதிராக செயற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை ஓரங்கட்டும் நடவடிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்துள்ளார் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. 15

# கைது வேட்டை தொடர்ந்தால் பெரும் போராட்டம் வெடிக்கும்

## அரசுக்கு சுமந்திரன் எச்சரிக்கை

கொழும்பு, ஒக. 05

மக்களின் தன்னெழுச்சிப் போராட்டங்களால் ஆட்சிப்பீடமேறிய புதிய அரசாங்கம், அந்தப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கியவர்களை வேட்டையாடும் செயற்பாடுகளை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற எதிரணிகளின் 15

# மனித உரிமைப் பாதுகாவலர்கள் தண்டிக்கப்படுவது ஏற்கமுடியாதது

## இலங்கையிடம் கூறியது ஐ.நா.

கொழும்பு, ஒக. 05

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டமை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பாதுகாப்பாளர்கள் தொடர்பான விசேட அறிக்கையாளர் மேரி லோலர் கவலை வெளியிட்டுள்ளார்.

மனித உரிமை பாதுகாவலர்களின் முயற்சிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும் தண்டிக்கப் படக்கூடாது என்றும் அவர் 15

# சர்வகட்சி அரசுக்கு பூரண ஒத்துழைப்பு

## ஜனாதிபதியிடம் மைத்திரி உறுதி

கொழும்பு, ஒக. 05

“சர்வகட்சி அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும்.” - என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், சுதந்திரக் கட்சி எம்.பிக்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது. பிரதமர் தினேஷ் குணவர்தனவும் சந்திப்பில் பங்கேற்றிருந்தார். 15

# இன்று 1 மணி நேர மின்வெட்டு

கொழும்பு, ஒக. 05

இன்று ஒரு மணித்தியாலம் மாத்திரம் மின் வெட்டு அமுல்படுத்தப் படும் என இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதன்படி, ஏ, பி, சி, டி, ஈ, எவ், ஜி, எச், ஐ, ஜே, கே, எல், பி, கியூ, ஆர், எஸ், ரி, யு, வி, டபிள்யூ ஆகிய வலயங்களில் இன்று இரவு நேரத்தில் மாத்திரம் ஒரு மணித்தியால மின் வெட்டு அமுலாகும் மென ஆணைக் குழுவின் தலைவர் 15

# கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டால் அமைச்சுப் பதவி குறித்து ஆராயலாம்

## கூறுகிறார் விக்னேஸ்வரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஒக. 05

தமிழ் மக்கள் சார்பில் தாம் முன்வைத்துள்ள கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்ட பின்னரே சர்வகட்சி அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியை ஏற்பது குறித்து ஆராயவுள்ளதாக தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்காக ஆதரவு வழங்குமாறு சகல கட்சிகளுக்கும் எழுத்து மூல அழைப்பை ஜனாதிபதி விடுத்திருந்தார்.

இந்தநிலையில், ஜனாதிபதி தெரிவின்போது, 15

# 11ஆம் திகதி நாட்டுக்கு திரும்புகிறார் கோட்டா?

கொழும்பு, ஒக. 05

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 11ஆம் திகதி இலங்கை திரும்பவுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போது சிங்கப்பூரில் தங்கியுள்ள நிலையில், அவர் எதிர்வரும் 11ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருக்க சிங் கப்பூர் அரசாங்கம் அனுமதி வழங்கி 15

# சம்பிக்கவுக்கு முக்கிய அமைச்சு?

கொழும்பு, ஒக. 05

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் பதவியை பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு வழங்குமாறு அரசாங்கத்தின் சிரேஷ்டர்கள் குழுவொன்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ள தாக தகவல் வெளியாகியுள்ளது.

முன்னதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சராக இருந்த அவர் எவ்வாறு அமைச்சுப் பணிகளை மிகச் சிறப்பாகக் 15

# காலிமுகத்திடல் போராட்டக்காரர்களை அகற்றும் முயற்சிக்கு எதிராக ரிட் மனு!

கொழும்பு, ஒக. 05

காலி முகத்திடலில் இருந்து இன்று மாலை 5 மணிக்குள் வெளியேறுமாறு பொலிஸார் வழங்கிய பணிப்புரையை இடைநிறுத்துமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் நான்கு ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

காலி முகத்திடலில் உள்ள ஆர்ப்பாட்டக்காரர்களை அனைத்து கட்டமைப்புகளையும் அகற்றி விட்டு அப்பகுதியை காலி செய்யுமாறு கொழும்பு கோட்டை பொலிஸார் நேற்று முன்தினம் அறிவித்துள்ளனர்.

இன்று மாலை 5 மணிக்குள் போராட்டக்காரர்கள் வெளியேற 15

# பஸ் கட்டணம் குறைப்பு

கொழும்பு, ஒக. 05

இன்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் சாதாரண பஸ் பயணக் கட்டணம் 11.14 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இதனைத் தெரிவித்துள்ளது.

அத்துடன், குறைந்தபட்ச பஸ் கட்டணத்தை 34 ரூபாவாக குறைக்கவுள்ளதாக அந்த ஆணைக்குழு கூறியுள்ளது.

# பருப்பு, சீனி, வெங்காயம், மிளகாய் ஆகியவற்றின் விலைகள் குறைந்தன!

கொழும்பு, ஒக. 05

பருப்பு, சீனி, கிழங்கு, வெங்காயம், மிளகாய் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை கணிசமாக குறைவடைந்துள்ளது.

புறக்கோட்டை வர்த்தகர் சங்கம் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய ஒரு கிலோ 600 ரூபாயாக இருந்த பருப்பு மொத்த விலை 410 ரூபாயாகவும், 15

# இலங்கையின் நிலைமை குறித்து அமெ.-இந்தியா உயர்மட்ட பேச்சு!

நாம்பென், ஒக. 05

இலங்கையில் நிலவும் நிலைமை குறித்து அமெரிக்காவும் இந்தியாவும் உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளன.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருடன் அமெரிக்க இராஜாங்கச் செயலர் அன்டனி பிளிங்கன் இலங்கையின் நிலைமை குறித்து கலந்துரையாடினார்.

ஜெய்சங்கருடனான சந்திப்பின்போது உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பின் தாக்கங்கள் மற்றும் இலங்கையின் பொருளாதார 15

# அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்தி போராட்டக்காரர்களுக்கு அச்சுறுத்தல்!

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக. 05

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல், பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக்கூற வலியுறுத்தி போராட்டங்களில் ஈடுபடுவோரை துன்புறுத்துவதற்கும் தன்னிச்சையாக கைது செய்து தடுத்து வைப்பதற்கும் இலங்கை அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்துவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள், வழக்கறிஞர் 15

## இப்படியும் நடக்கிறது...!

அவர் ஒரு மூத்த ஊடகர். ஊடகர் என்றோ அல்லது அரசியல் விமர்சகர் என்றோ அவரை சுருக்கிவிடமுடியாது. தமிழ் அரசியல்வாதிகள் ஒவ்வொருவருடனும் நெருங்கிப் பழகுபவர். அவர்களைப் பற்றி மிக ஆழமாக அறிந்து வைத்திருப்பவர்.

நேற்றுக் காலை அவரை நித்திரையால் எழுப்பி இரண்டு கேள்விகள் கேட்டேன்.

முதலாவது கேள்வி: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கூட்டமைப்பினர் சந்தித்தபோது அதில் கலந்துகொண்ட சுமந்திரன்,

“நாங்கள் ஜனாதிபதி தெரிவின்போது உங்களுக்கு வாக்களிக்கவில்லை. ஆனாலும் நீங்கள்தான் இப்போது ஜனாதிபதி என்பதால் எங்கள் பிரச்னைகளை உங்களிடம் சொல்லி அவற்றுக்கு தீர்வு கேட்டுப் பேச வந்தோம்“ என்று கூறினாரெரன செய்திகள் வெளிவந்திருக்கின்றவே. அவர் எதற்காக இப்படி சொல்லியிருப்பார் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?. இப்படிச் சொல்லியிருக்க வேண்டியதில்லையே“ எனறேன்.

அடுத்த கேள்வியையும் கேட்பதற்கு முதலே அவர், பேசத் தொடங்கிவிட்டார்.

“இரண்டாயிரத்து பத்திலிருந்து பதினைந்து வரை மகிந்தர் ஜனாதிபதியாக இருந்தபோது, அவரை கூண்டில் ஏற்றுகின்றோம் என்று கூறிக்கொண்டு, ஐ. நா. மனித உரிமைகள் பேரவையிலேயே காலத்தைக் கடத்தினார்கள். அப்போது ஜனாதிபதியுடன்தான் நமது பிரச்னைகளை பேசவேண்டும் என்று சிந்திக்கவில்லை. பின்னர் மகிந்தவை விழுத்துகிறோம் என்று நல்லாட்சியில் மைத்திரியைக் கொண்டுவந்தார்கள். ஆனால், மைத்திரி - ரணில் கூட்டாட்சியின்போது பிரதமராக இருந்த ரணிலுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு, மைத்திரியை ஆறடி மண்ணுக்குள் அனுப்புவோம் என்றதோடு மட்டுமல்லாமல், அவரை நாய் என்று பொதுவெளியில் வார்த்தைகளைக் கொட்டினார்கள். அந்த ஐந்து ஆண்டுகளிலுமே, ரணிலை பாதுகாப்பதைப் பற்றி மாத்திரமே சிந்தித்தார்களே தவிர, தமிழ் மக்களைப்பற்றி சிந்திக்கவே இல்லை.

பிறகு என்ன நடந்தது, கோட்டாபய ஜனாதிபதித் தோல்தலில் போட்டியிட்டபோது, அவரே வெற்றிபெறுவார் என்று முழுநாட்டுக்கும் தெரிந்திருந்தபோதிலும், தோல்வியடைவார் என்று நம்பப்பட்ட சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளித்தார்கள். கடைசியில் என்ன நடந்தது? கோட்டாபய வெற்றிபெற்ற பின்னர், அவருடன் பேசுவதற்காக அவரின் கதவு எப்போது திறக்கும் என்று வாசல்படியில் காத்திருந்தார்கள் பேசுவதற்காக.

கோட்டாபயவை வீட்டுக்கு அனுப்புகின்ற போராட்டத்தில் தமிழ் மக்கள் அக்கறை காட்டாதபோதிலும், போராட்டக் காரர்களை சந்திப்பதும், அவர்களை உசுப்பேத்துவதுமாக அங்கும் இங்கும் ஓடித்திரிந்தார்கள்.

பிறகு என்ன நடந்தது, அவர் போய் ரணில் வந்ததும், தமது தனிப்பட்ட பகைமை காரணமாக ரணிலுக்கு எதிராகப் போராட்டக்காரர்களை உசுப்பேத்தியதோடு, அவரை ஒருநாள் கூட ஜனாதிபதி பதவியில் அமர இடமளிக்காதீர்கள் என்று பகிரங்கமாகப் போராட்டக்காரர்களிடம் கோரிக்கை விட்டதோடு நின்றுவிடாமல், பாராளுமன்றத்தில் நடந்த தேர்தலில், நடுநிலைமை வகிக்காமல் ரணிலுக்கு எதிரான வேட்பாளரை ஆதரிக்க முடிவெடுத்தார்கள்.

ரணில்தான் வெற்றிபெறுவார் என்பது அரசியலில் குழந்தைகளுக்கும் தெரிந்திருந்தபோதிலும் அவரை எதிர்க்க முடிவெடுத்தார்கள்.

இப்போது ரணில் ஜனாதிபதி ஆனதும், அவருடன் பேசுவதற்கு சென்றிருக்கிறார்கள். சென்ற பின்னரும் அரசியல் இராஜதந்திரத்தில் தமது ஆற்றாமையை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

அரசியல் இராஜதந்திரம் என்பது சுமந்திரனிடம் அறவே இல்லை என்பதை அவர் கடந்த காலங்களில் ஒவ்வொரு கட்டத்திலும் நிரூபித்துக்கொண்டே இருக்கின்றார்“ என்றார் அவர்.

சரி, அவர்களிடம்தான் இராஜதந்திரம் இல்லையென்றால், ரணில் எதற்காக கூட்டமைப்பிலும் சிலர் தனக்குத்தான் வாக்களித்தார்கள் என்று கூறினார். இரகசிய வாக்கெடுப்பில் கூட்டமைப்பினர் அப்படி வாக்களித்தார்கள் என்பது அவருக்கு எப்படித் தெரிந்தது? என்றேன் நான்.

“ரணில் அரசியல் அனுபவத்தோடும், அரசியல் இராஜதந்திரத்தோடும் அவர் கலாநிதி பட்டதாரி என்றால், நம்மவர்கள் முன்பள்ளி அனுபவத்தோடு நிற்கிறார்கள்.

ரணில் எப்படி பதில் சொன்னார்? கூட்டமைப்பு எம்.பிக்களில் சிலர், தமிழ் மக்களின் நலன்கருதி எனக்குத்தான் வாக்களித்தார்கள் என்றுதான் கூறினார். அவர் அவ்வாறு கூறியதன் மூலம் ரணில் சொல்ல வருவது என்ன?

டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவளிப்பது என்று முடிவெடுத்தவர்கள் தமது சொந்த சுயநலன்கருதி அப்படியொரு முடிவை எடுத்தபோது, கூட்டமைப்பிலுள்ள சிலர் தமிழ் மக்களின் நலன்சார்ந்து நின்று அப்படி முடிவெடுத்தார்கள் என்கிறார் ரணில்.

அவருக்குத்தானே தெரியும், தனது நல்லாட்சி அரசில் எப்படி தனக்கு ஆதரவாக பல தடவைகள் கூட்டமைப்பினர் வாக்களித்தார்கள்? யாருடைய நலனை அவர்கள் முன்னிறுத்தினார்கள் என்று? அதுதான் அவர் அப்படி அழுத்தம் திருத்தமாக கூட்டமைப்பினர் சிலர் தமிழ் மக்களின் நலனுக்காக தனக்கு வாக்களித்தார்கள் என்றிருக்கிறார்“ என்றார் அவர்.

இப்போதுதான் இந்த ஊர்க்குருவிக்கே நடக்கின்ற விசயங்கள் வெளிச்சத்திற்கு வந்தன.

வாசகர்கள் உங்களுக்கும் தெளிவு வந்திருக்கும் என்று நம்புகின்றேன்.

- ஊர்க்குருவி.

# சடலங்கள், துப்பாக்கிச்சூடுகள் குறித்து உடனடி விசாரணை நடத்தவேண்டும்

### சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஓக. 05

**நாட்டில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் மற்றும் காலி முகத்திடல் கடற்கரையில் கண்டெடுக்கப்பட்ட சடலங்கள் தொடர்பில் உடனடியாக முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்னவிடம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அண்மைய நாட்களில் பதிவான பல நபர்களின் மரணத்துக்கு காரணமான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பாக சட்டத்தரணிகள் சங்கம், பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளது.

அத்துடன், கரையோரப் பகுதிகளில் குறிப்பாக காலி முகத்திடலை அண்மித்த பகுதிகளில் சடலங்கள் கரையொதுங்குவது தொடர்பில் ஊடகங்களில் வெளியான செய்திகள் தொடர்பிலும் சங்கம், பொலிஸ்மா அதிபரின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இவை தொடர்பில் அதிகாரிகளிடமிருந்து எந்த விளக்கமும் கிடைக்காத நிலையில், இதுபோன்ற சடலங்கள் கரையொதுங்குவது பொது மக்களின் ஒரு பிரிவினரிடையே

அச்சத்தை ஏற்படுத்தியதை அவதானித்துள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் பொது மக்களின் நம்பிக்கை பேணப்படுவதையும், இலங்கையின் நற்பெயருக்கு பாதகமான பாதிப்பு ஏற்படாமல் இருப்பதையும் உறுதி செய்வதற்கு இந்த இரண்டு விடயங்கள் தொடர்பிலும் உடனடியாக விசாரணை நடத்தவேண்டிய தன் அவசியத்தை பொலிஸ்மா அதிபரிடம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. (அ)

# ஜனாதிபதி ரணிலை நேற்று சந்தித்து பேசிய சீன தூதுவர்

கொழும்பு, ஓக. 05

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், சீனத் தூதுவர் சீ சென்ஹொங்குக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்துகளை தெரிவித்த சீனத் தூதுவர், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடினார்.

“ஒரு சீனா கொள்கை” தொடர்பில் இலங்கையின் கடைப்பிடிப்பு மற்றும் ஐக்கிய நாடுகளின் இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு பற்றிய சாசனக் கோட்பாடுகளுக்கான இலங்கையின் அர்ப்பணிப்பையும் ஜனாதிபதி விக்கிரமசிங்க மீண்டும் வலியுறுத்தினார்.

“தற்போதைய உலகளாவிய பதற்றங்களை மேலும் அதிகரிக்கும் ஆத்திரமூட்டல்களை நாடுகள் தவிர்க்க வேண்டும். பரஸ்பர மரியாதை மற்றும் நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடாமை, அமைதியான ஒத்துழைப்பு மற்றும் மோதலின்மைக்கு ஒரு முக்கிய அடிப்படையாக அமையும்” என்றும் இங்கு குறிப்பிடப்பட்டது. (அ)

# இரு மாதங்களில் மட்டும் 20 துப்பாக்கிச் சூடுகள்!

### 21 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 05

இலங்கையில் கடந்த மே மாதம் 30ஆம் திகதி முதல் நேற்று வரை 20 துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து பதிவாகியுள்ள துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் மொத்தம் 21 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவா தெரிவித்தார்.

போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளே பெரும்பாலான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின் பின்னணியில் இருக்கின்றனர் என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக அவர் மேலும் கூறினார். (ஐ)

# சர்வகட்சி அரசில் இணைந்து முழு ஆதரவை வழங்குவேன்

கொழும்பு, ஓக. 05

“சர்வகட்சி அரசில் இணைந்து முழு ஆதரவை வழங்குவேன்” - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார். இது சம்பந்தமாக அவர் ஜனாதிபதியை நேற்று முன்தினம் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

“நான் அமைச்சுபி பதவிகளுக்காக ஆசைப்ப டுபவன் அல்லன். 8 ஆண்டுகள் பதவிகள் இன்றி இருந்தவன். ரணிலை ஆதரிக்கவில்லை. ஆனால், சர்வகட்சி அரசில் இணைவேன், ஆதரிப்பேன்” என்று குமார வெல்கம எம்.பி. மேலும் கூறினார். (அ)

## பௌத்த துறவிகளுக்கு தானமாக எரிபொருள்!

கொழும்பு, ஓக. 05

பிக்குகளுக்கு எரிபொருளை தானமாக அளித்து ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளார். பிரபல வர்த்தகர் பிடிகல அத்துக்கோரள.. பிக்குகளுக்கு தானம் வழங்குவது பௌத்த மத மரபில் முக்கியமான அங்கம். உணவு உள்ளிட்ட அவ சிய பொருட்களே தானமாக வழங்கப்படுவது மரபு. ஆனால், இந்த மரபுக்கு மாறாக எரிபொருளை வழங்கியுள்ளார் பிரபல வர்த்தகர் பிடிகல அத்துக்கோரள. தேயிலை குழுமத்தின் ஸ்தாபகரான மர்ஹூம் டி. டபிள்யூ. அத்துகோரளவின் 11ஆவது நினைவு தினத்தை முன்னிட்டே நேற்று பிடிகல அத்துகோரல தேயிலை தொழிற்சாலையில் பிக்குகளுக்கு தானம் வழங்கி வித்தியாசமான பூஜை ஒன்று இடம்பெற்றது.

இதன்போது, ஒவ்வொரு பிக்குவுக்கும் 10 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்டது.

தான் முதன்முறையாக இதுபோன்ற தானத்தை பெற்றதாகவும், இந்த தானம் இன்றைய நிலையில் விலைமதிப்பற்றது என்றும் பிக்கு ஒருவர் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
05.08.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஆடி 20

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# மக்களின் பிரதிநிதிகள் பொறுப்பு?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், அதே போன்று, தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் ஏனைய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்போர், மிகவும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பின்போது, அவர் குறிப்பிட்ட ஒரு விடயத்தை பொதுவெளிகளில் பெரிதுபடுத்தி, கூட்டமைப்பில் ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான பிரசாரங்கள் இடம்பெறுகின்றன. சிங்கள இராஜதந்திரத்தின் பிரித்தாளும் தந்திரங்களை தமிழ் மக்கள் நன்கறிவர். பிரித்தானிய காலனித்துவ ஆசான்களிடமிருந்து கற்றுக்கொண்ட பிரித்தாளும் தந்திரங்களை, காலத்துக்கு காலம், சிங்கள ஆளும் வர்க்கம் மிகவும் கச்சிதமாக தமிழ் தேசியர்கள் மீது பிரயோகித்து வந்திருக்கின்றது. இந்தத் தந்திர வலைக்குள், பலர் கடந்த காலத்தில் வீழ்ந்திருக்கின்றனர்.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் ஸ்தாபகர், எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் மருமகனும் புகழ்பெற்ற அரசியல் விஞ்ஞானியுமான கலாநிதி, ஏ. ஜே. வில்சன், இதற்கு சிறந்த உதாரணமாவார். ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் ஆலோகராக வில்சன் பணியாற்றியிருந்தமையைப் பலரும் இப்போது மறந்திருக்கலாம். இது சிங்கள இராஜதந்திரத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டு. இவ்வாறான அனுபவங்கள் இருக்கின்றபோது, ரணில் விக்கிரமசிங்க சிரித்துக் கொண்டு கூறும் விடயங்களை, நமது வரலாற்று அனுபவத்திலிருந்து சிந்திக்க வேண்டும். நல்லாட்சி அரசாங்கம் என்று சொல்லப்பட்ட காலத்தில், சம்பந்தன் முற்றிலுமாக கொழும்பை நம்பியே செயல்பட்டிருந்தார்.

சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதிலும்கூட, ஒரு முறைகூட புதுடில்லிக்கு விஜயம் மேற்கொள்ளவில்லை. அந்தளவுக்கு சிங்களம், தந்திரத்தின் மூலம் சம்பந்தனை வசப்படுத்தியிருந்தது. ஐந்து வருடங்கள் அரசியல் யாப்பு தொடர்பில் சம்பந்தனை அலையவிட்டு, இறுதியில் வெறுங்கையுடன் அனுப்பியது. இதற்கு மற்றவர்களை குற்றம் கூற முடியாது. அனைத்து ஆளும் தரப்புக்களின் அணுகுமுறையும் ஒன்றுதான். அதாவது, எதிர்தரப்புக்களை பலவீனப்படுத்தி, அவர்களின் பேரம் பேசும் ஆற்றலை மட்டுப்படுத்துவது. இதன் மூலம் நீண்டகால நோக்கில், எதிரணிகளை, தங்களுக்குள் கரைப்பது இல்லாவிட்டால் இல்லாமலாக்குவது. இதனை கருத்தில் கொண்டுதான் தமிழர் தரப்புக்கள் ஒவ்வொரு விடயங்களையும் அணுக வேண்டும்.

கூட்டமைப்பிலுள்ள ஒரு சிலரை இலக்கு வைப்பதன் ஊடாக ஒட்டுமொத்த கூட்டமைப்பே சிதைகின்றது. ஒப்பீட்டடிப்படையில் இருக்கும் ஓர் அரசியல் ஸ்தாபனத்தையும் சிதைக்கும் முயற்சிகள் திட்டமிட்டு முன்னெடுக்கப்படுவது போல் தெரிகின்றது. இது தொடர்பில் தமிழ்த் தேசிய தரப்புக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். ஆக்கபூர்வமான விமர்சனங்கள் எப்போதுமே வரவேற்கப்பட வேண்டியது ஆனால், ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்கள் யார் - அவர்கள் எதற்காக இவ்வாறானதொரு காலத்தில், இவ்வாறான குற்றச்சாட்டுக்களை பொதுவெளிகளில் முன்வைக்கின்றனர். ஒப்பீட்டடிப்படையில், தமிழ் மக்களிடம் இருக்கின்ற ஒரேயொரு தேசிய பலம், பாராளுமன்ற உறுப்புரிமைகள் மட்டும்தான். அதனையும் சிதைப்பதுதான் இவ்வாறான பிரசாரங்களுக்கு பின்னாலிருக்கின்ற தீய நோக்கமா?

தென்பகுதியில் எவர் ஆட்சியதிகாரத்தில் இருந்தாலும் அவர்களுடன் பேரம் பேசி, பெறக் கூடியதை பெறுவதுதான், தமிழ்த் தேசிய அரசியல் வேலைத்திட்டமாக இருக்க வேண்டுமேயன்றி, தென்பகுதியின் பிரித்தாளும் இராஜதந்திர பொறிக்குள் வீழ்ந்து, தங்களை தாங்களே தாக்கி, சிதைந்து போவதல்ல. இன்றைய சூழலில், ஒப்பீட்டடிப்படையில், ஒரு தனித்தரப்பாக சர்வதேச சமூகத்தை எதிர்கொள்ளக் கூடிய ஆற்றலோடு, ஈழத் தமிழர் சமூகமே இருக்கின்றது. இந்த நிலைமையை சிதைக்க வேண்டிய தேவை கொழும்பின் தந்திரசாலிகளுக்கு உண்டு.

# ஜனாதிபதியின் உரை - சந்திப்பு!

- அலசுவது இராஜதந்திரி -



*இரு முக்கிய நிகழ்வுகள் நேற்று முன்தினம் ஒரேநாளில் இடம்பெறறிருந்தன. அவற்றில் முதலாவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில்*

*நிகழ்த்திய அவரின் கொள்கைப் பிரகடன உரை. மற்றையது தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருடனான ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பு.*

*ஜனாதிபதியுடனான தமிழ் தேசிய கூட்டமைப்பினரின் சந்திப்பு குறித்து தெரிவிப்பதானால் அதனை “புதிய மொந்தையில் பழையகள்“ என்று மட்டுமே குறிப்பிட முடியும்.*

*நேற்று முன்தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கதைத்த விடயங்கள் யாவும் அவருடன் முன்னரும் பல தடவைகள்*

*பேசப்பட்டுள்ளன. அத்துடன், தன்னோடு எதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பேசுவார்கள் என்பதையும் ரணில் விக்கிரமசிங்க தெரிந்தே வைத்துள்ளார்.*

*இந்நிலையில், நேற்று முன்தினம் இடம்பெற்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருடனான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பேச்சு என்பது*

*ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர் இடம்பெற்ற முதலாவது பேச்சு என்று குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதாகவும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் பங்குபற்றுதலின்றி இடம்பெற்ற ஒரு பேச்சு என்பதையுமே சுட்டிக்காட்டக்கூடியதாக இருக்கின்றதே தவிர வேறெதனையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சுக் குறித்துத் தெரிவிக்க முடியாதுள்ளது.*

*ஏனெனில், வடக்கு-கிழக்கு அரசியல் தீர்வுக்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, வடக்கு - கிழக்கில்*

*காணி அபகரிப்பு போன்ற விடயங்களே நேற்றுமுன்தினம் ரணில் விக்கிரமசிங்கவுடன் வழமை போன்றே பேசப்பட்டன. அவரும் வழமையாக அவருக்கு முன்பிருந்தோர் கூறுவதைப் போலவே நாட்டின் அபிவிருத்திக்கு வடக்கு - கிழக்கு பிரச்னைக்கு தீர்வுகாணப்பட வேண்டியது அவசியமானதாகும் என்று கூறியிருந்தமையையும் அவதானிக்க முடிந்தது.*

*எனவே, ஜனாதிபதிகளாக வருவோர் வடக்கு - கிழக்கு பிரச்னைக்குத் தீர்வுகாண வேண்டுமெனக் கூறுவதும், வடக்கு - கிழக்கு அரசியல் பிரதிநிதிகள் பேச்சுகளுக்கு சென்றுவிட்டு வந்து “பழைய குருடி கதவை திறவடி“ என்பது போல “வடக்கு-கிழக்கு இணைந்த 13ஆவது திருத்தச்சட்டம் மூலமான அரசியல் தீர்வு பற்றி பேசினோம். தமிழ் அரசியல் கைதிகள் பற்றி பேசினோம். காணி - நில உரிமைகள் பற்றி பேசினோம் என்று கூறுவதையே அரசியல் அமைப்பில் 13ஆவது திருத்தச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட காலம் முதல் பேசிவருவதைக் காணமுடிகின்றதே தவிர, இதுவரை வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண சபையோ அல்லது அதற்குரிய அதிகாரப் பரவலாக்கமோ எட்டாக்கனிகளாகவே இருந்து வருகின்றன.*

*இந்த ஆண்டுடன் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான வடக்கு - கிழக்கு மாகாணசபை அறிமுகமாகி 35 ஆண்டுகள் பூரத்தியாகின்றன.*

*இந்த 35 ஆண்டுகளில் மாகாண சபை முறைமையை பலப்படுத்தி இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் வழிகாட்டல்களின் அடிப்படையில் அந்த மாகாண சபை முறைமையை முன்னெடுத்திருந்தால் இன்று இந்தியாவின் அனுசரணையோடு சிறந்த வளர்ச்சியை இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணம் கண்டிருக்கும்.*

*ஆனால், கிடைத்த சந்தர்ப்பங்கள், எட்டப்பட்ட ஒப்பந்தங்களை எல்லாம் தட்டிக்கழித்து தோல்வியடைய வைத்ததைப் போலவே இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையும் தோல்வியடைய வைத்ததே வடக்கு - கிழக்கின் துரதிர்ஷ்டமான அரசியல் வரலாறாக இருக்கின்றது.*


*ஏனைய அரசியல் தீர்வு குறித்த அரசியல் ஒப்பந்தகளைப் போலன்றி இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்காக இலங்கை மட்டுமல்ல. இந்தியாவும் நிறையவே விலை கொடுத்துள்ளது.*

*இலங்கை - இந்திய ஒப்பந்தம் நிறைவேறியபோது அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் அணியிலிருந்தவர்களில் ஒருவரே இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. எனவே, 13ஆவது திருத்தச் சட்டத்தின் முக்கியத்துவத்தையும்*

*அதன் அமுலாக்கத்தின் அவசியத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் நிச்சயம் உணர்ந்தே இருப்பார். எனவே, தமிழ்த் தேசிய கூட்டமைப்போடு பேச்சு நடத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு - கிழக்கு பிரச்னைக்கு தீர்வின்றேல் நாட்டுக்கு விமோசனம் இல்லை என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.*

*எனவே, அரச தரப்பு தமிழ் தேசிய கூட்டமைப்போடு மட்டுமல்லாது, ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளுடனும் பேச்சுகளை எட்டுவதே நாட்டின் விமோசனத்துக்கு வழிவகுக்கும் எனக்கருதலாம்.*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஓகஸ்ட் - 05 வெள்ளிக்கிழமை
சுபகிருது வருடம் - ஆடி 20
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.30
திதி : அஷ்டமி




**மேடம்**
உங்களுடைய செயல்களில் இன்று ஆதாயமான நிலை உண்டாகும்.நீங்கள் எதிர்பார்த்த நல்ல செய்தி ஒன்று வரும். மகிழ்ச்சி அதிகரிக்கும். நீங்கள் நினைத்ததை சாதித்து முடிப்பீர்கள்.

**இடபம்**
எதிர்பார்த்த ஆதாயம் உங்களை வந்து சேரும். புதிய தைரியம் பிறக்கும். தடைகளை எல்லாம் சரி செய்வீர்கள். முயற்சியில் முன்னேற்றம் உண்டாகும். சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள்.

**மிதுனம்**
குடும்பத்தில் சுபச்செலவுகள் அதிகரிக்கும். அதற்கேற்ற வரவு ஏற்படும்.எதிர்பார்த்த வருவாய் வரும். பொன் பொருள் வாங்கி மகிழ்வீர்கள்.நீண்ட நாள் பிரச்னை ஒன்றிற்கு இன்று முடிவு காண்பீர்கள்.

**கடகம்**
மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் உண்டாகும். துணிச்சலுடன் செயல்படுவீர்கள்.நெருக்கடிகளை எல்லாம் சமாளித்து நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள். சங்கடங்கள் விலகும்.

**சிம்மம்**
நீங்கள் எதிர்பார்த்த வரவு வந்து சேரும். லாபமான நாள்.பிரச்னைகளை சரி செய்து புதிய முயற்சியில் இறங்குவீர்கள்.உங்களுடைய திறமையால் செயல்களில் லாபம் காண்பீர்கள்.

**கன்னி**
வரவுகளில் இருந்த தடைகள் அகலும். உற்சாகம் அதிகரிக்கும். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். செல்வாக்கு உயரும். சிலருக்கு எதிர்பாராத பண வரவு உண்டாகும். மகிழ்ச்சியான நாள்.

**துலாம்**
மனதில் குழப்பம் உண்டாகும். நீங்கள் எதிர்பாராத சம்பவங்கள் நடைபெறும். குடும்பத்தின் நலனுக்கான ஒரு முடிவை இன்று துணிச்சலுடன் எடுப்பீர்கள். உங்கள் எண்ணம் ஒன்று நிறைவேறும்.

**விருட்சிகம்**
எதிர்பாராத செலவுகளும் அலைச்சலும் உண்டாகும். செயலில் கவனம் வேண்டும். மகிழ்ச்சி உண்டாகும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி குறித்த பேச்சு உண்டாகும். திடீர் செலவுகளை சந்திப்பீர்கள்.

**தனுசு**
நிதி நிலையில் இருந்த பிரச்னை தீரும். திடீர் வரவால் மகிழ்வீர்கள். திட்டமிட்டு செயல்படுவீர்கள். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நவீன பொருட்கள் வாங்குவீர்கள்.

**மகரம்**
தொழிலில் ஏற்பட்டிருந்த பிரச்னைகளை சரி செய்து லாபம் காண்பீர்கள். போட்டியாளர்கள் விலகிச் செல்வார்கள். பொருளாதார நிலை உயரும். லாபமான நாள். சாதகமான நிலை உண்டாகும்.

**கும்பம்**
நண்பர்களின் ஆதரவுடன் உங்களுடைய முயற்சியில் வெற்றி காண்பீர்கள். நீண்ட நாட்களாக நீங்கள் எதிர்பார்த்திருந்த ஒரு விஷயம் நடைபெறும். உங்களது முயற்சி இன்று நிறைவேறும்.

**மீனம்**
பேச்சிலும் செயலிலும் கவனம் தேவை. யோசித்து செயல்பட வேண்டிய நாள்.உங்கள் மனம் நினைப்பதை உங்களால் செயல்படுத்த முடியாமல் போகும். உங்களுக்கு கோபத்தை உண்டாக்கும் வகையில் சிலர் செயல்படுவர். நிதானம் அவசியம்.

# கொரோனாவால் பெற்றேரை இழந்த சிறுவர்களுக்கு ரூ. 303 கோடி இழப்பீடு

சென்னை, ஓக. 05

தமிழகத்தில் கொரோனாவால் பெற்றோரை இழந்த 9,896 சிறுவர்களுக்கு 303 கோடி (இந்திய) ரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கொரோனா 2வது அலை மிகவும் மோசமான சூழலை ஏற்படுத்தியது. கொரோனாவால் பெற்றோர் இருவரையும் இழந்த 18 வயதுக்கு கீழ் உள்ள சிறுவர்களுக்கு ரூ.5 இலட்சமும், ஒருவரை மட்டும் இழந்த பிள்ளைகளுக்கு ரூ.3 இலட்சமும் இழப்பீடாக வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்தது.

இந்தத் தொகை சிறுவர்களின் பெயரில் வைப்பிடப்பட்டு, அந்த குழந்தை 18 வயது நிறைவடையும் போது வட்டியோடு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும் பெற்றோர்களை இழந்த சிறுவர்களுக்காக அரசு இல்லங்களில் மற்றும் விடுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் தங்குவதற்கு இடம் வழங்கப்படும் என்றும் இக்குழந்தைகளுக்கு பட்டப்படிப்பு வரையிலான கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்து செலவினங்களையும் அரசே ஏற்கும் என்றும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளமையும குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அரசாங்கமே விளைநிலங்களை அழிப்பது எவ்வகையில் நியாயம்?

சென்னை, ஓக. 05

“நீர்நிலையை ஆக்கிரமித்துக் கட்டப்பட்டுள்ள தனியார் கட்டடங்களை இடிக்க சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் தமிழ்நாடு அரசு, விமான நிலையம் அமைப்பதற்குத் தானே நீர்நிலைகளை அழிக்க முயல்வது எவ்வகையில் நியாயம்?” என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை: ”காஞ்சிபுரம் மாவட்டம், பரந்தூரில் வேளாண் நிலங்களை அழித்து, புதிய விமான நிலையம் அமைக்க தமிழ்நாடு அரசு அளித்த பரிந்துரையை ஏற்று, இந்திய மத்திய அரசு ஒப்புதல் அளித்திருப்பது பெரும் அதிர்ச்சியளிக்கிறது.

அந்தப் பகுதி மக்களின் கடும் எதிர்ப்பையும் மீறி, 3,000 ஏக்கர் விளைநிலங்களையும், 30 இற்கும் மேற்பட்ட நீர்நிலைகளையும், ஆயிரக்கணக்கான மக்கள் குடியிருப்புகளையும் அழித்து விமான நிலையம் அமைக்க முயல்வது வன்மையான கண்டனத்திற்குரியது.

அடுத்த 10 ஆண்டுகளுக்குப் பயன்படும் வகையில், பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தினை விரிவாக்கம் செய்யும் பணிகள் தற்போது வேகமாக நடந்து வரும் நிலையில், அவசர அவசரமாகப் புதிய விமான நிலையம் அமைப்பதற்கான தேவை என்ன வந்தது? என்பதை இந்த நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள் மக்களுக்கு விளக்க வேண்டும்.


உண்ண உணவு தரும் விளைநிலங்களையும், குடிப்பதற்கு நீர் தரும் நீர்நிலைகளையும், மக்கள் வாழும் வீடுகளையும் அழித்தொழித்து அதன் மீது ஓடுபாதைகளையும், தொழிற்சாலைகளையும், வணிக வளாகங்களையும் அமைப்பதை வளர்ச்சி என்று அரசே கூறுவதை எப்படி ஏற்க முடியும்?

நீர்நிலையை ஆக்கிரமித்துக் கட்டப்பட்டுள்ள தனியார் கட்டடங்களை இடிப்பதற்கு சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் தமிழ்நாடு அரசு, விமான நிலையம் அமைப்பதற்குத் தானே நீர்நிலைகளை அழிக்க முயல்வது எவ்வகையில் நியாயமாகும்?

பரந்தூரில் வேளாண் நிலங்களை அழித்துப் புதிய விமான நிலையம் அமைக்கும் முடிவைக் கைவிட்டு, மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் விளைநிலங்களோ, நீர்நிலைகளோ, வீடுகளோ இல்லாத இடத்தில் அமைக்க வேண்டுமென்று நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்” என்று அவர் கூறியுள்ளார். (ஐ)

# கருணாநிதிக்கு நினைவு சின்னம் அமைப்பதில் தவறு என்ன உள்ளது?

## தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கேள்வி



சென்னை, ஓக. 05

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு பேனா வடிவில் நினைவு சின்னம் அமைப்பதில் என்ன தவறு கேள்வி எழுப்பியுள்ள தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி, அதை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று கூறுபவர் களின் மரபணுவை பரிசோதிக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

மறைந்த முன்னாள் முதல்வரும், திமுக தலை வருமான மு. கருணாநிதிக்கு சென்னை மெரினா கடற்கரையில் பேரறிஞர் அண்ணா நினைவிடம் அருகில் 2.23 ஏக்கர் பரப்பளவில் 33 கோடி இந்திய ரூபாய் மதிப்பீட்டில் அரசு சார்பில் நினைவிடம் கட்டப்பட்டு வருகிறது.

அதில், கருணாநிதியின் வாழ்க்கை, சிந்தனை குறித்த நவீன ஒளிப்படங்களும் அமைய உள் ளது. மேலும், நடுக்கடலில் 134 அடி உயரத்திற்கு கருணாநிதிக்கு பேனா வடிவில் 80 கோடி ரூபாயில் நினைவுச் சின்னம் வைக்கப்படும் என தமிழக அரசு சார்பில் அறிவிக்கப்பட்டது.

இதற்கு அரசியல் கட்சியினரிடையே பல எதிர் கருத்துக்களும், விமர்சனங்களும் எழுந்துள்ளது. இதற்கு தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரி கருத்து தெரிவித்துள்ளார்.

அதில், கருணாநிதிக்கு பேனா வடிவில் நினைவு சின்னம் அமைப்பதை வரவேற்கிறோம். அதில் எந்தவித தவறும் இல்லை என்றார். (ஐ)

# கட்சி அலுவலக சாவி விவகாரம் பன்னீர்செல்வம் மேன்முறையீடு

சென்னை, ஓக. 05

அ. தி. மு. க. அலுவலக சாவியை பழனிசாமி தரப்பிடம் தந்ததை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் பன்னீர்செல்வம் மேல் முறையீடு செய்துள்ளார்.

எடப்பாடி பழனிசாமி மற்றும் ஓ. பன்னீர் செல்வம் ஆதரவாளர்களுக்கு இடையே நடந்த மோதலைத் தொடர்ந்து, ஜூன் 11 ஆம் திகதி அ. தி. மு. கவின் தலைமை அலுவலகத்திற்கு வருவாய் துறையினர்சீல் வைத்தனர்.

அ. தி. மு. க. அலுவலகத்திற்கு வைக்கப்பட்ட சீலை அகற்றக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் பழனிசாமி - பன்னீர்செல்வம் தரப்பில் தனித்தனியே முறையிடப்பட்டது. அலுவலகத்தின் சாவியை இடைக்கால பொதுச் செயலாளர் பழனிசாமியிடம் ஒப்படைக்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில், ஓ.பன்னீர் செல்வம் சென்னை உயர் நீதிமன்ற உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்துள்ளார். பன்னீர்செல்வம் உச்ச நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார்.

## அதிக விலைக்கு அரிசி விற்பனை மூன்று வர்த்தகர்களுக்கு அபராதம்!

யாழ்ப்பாணம், ஓக. 05

நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்த இரு வர்த்தகர்களுக்கும், சமையல் எரிவாயு சிலிண்டரை பதுக்கி வைத்திருந்த வர்த்தகர் ஒருவருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனைகளை நடத்தி, அரிசியை நிர்ணய விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்த இரு வர்த்தகர்கள் மற்றும் எரிவாயு சிலிண்டரை பாவனையாளருக்கு வழங்காது பதுக்கி வைத்திருந்த வர்த்தகர் ஒருவருக்கு என மூவருக்கு எதிராக தனித்தனியாக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்கு விசாரணைகளின்போது வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டமையை அடுத்து, மூவருக்கும் நீதிமன்று தலா ஒரு இலட்சம் ரூபாய் தண்டம் அறவிட்டது. (ஐ)



## ஜோசப் ஸ்டாலின் கைதுக்கு யாழ்ப்பாணத்தில் எதிர்ப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 05

**இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ். மாவட்டத்தின் பல பாடசாலைகளின் முன்பாக ஆசிரியர்கள் நேற்று வியாழக்கிழமை கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, உரும்பிராய் இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, யாழ் இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, தேவரயாளி இந்துக் கல்லூரி, கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி உள்ளிட்ட பல பாடசாலைகளின் முன்பாக போராட்டங்கள் நடைபெற்றன.

இதேவேளை, ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட தொழில்சங்க தலைவர்கள் மற்றும் செயல்பாட்டாளர்களை அரசாங்கம் உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி, தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள போராட்டம் நேற்று கொழும்பு கோட்டை புகையிரதத்திற்கு முன்பாக நடைபெறவுள்ளது.

போராட்டக்காரர்கள் பல்வேறு பதாகைகளை ஏந்தி போராட்டம் நடத்தினர். (ஐ- 2)



## ஜோசப் ஸ்டாலின் கைது; வவுனியாவில் போராட்டம்!

வவுனியா, ஓக. 05

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலினின் கைதுக்கு எதிராக வவுனியாவின் பல பாடசாலைகளில் ஆசிரியர்கள் போராட்டத்தை நேற்று முன்னெடுத்திருந்தனர்.

முற்பகல்.10.30 மணியளவில் பெரும்பாலான பாடசாலைகளில் ஆர்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவித்த போது...

"ஜனநாயக ரீதியாக உரிமைக்காக போராடிய எமது பொதுச்செயலாளர் முறையற்ற விதத்திலே கைதுசெய்யப்பட்டுள்ளார். அதற்கு எமது வன்மையான கண்டனங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அவர் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி நிற்கின்றோம்.

அத்துடன், இந்தஅரசு அவசரகாலச்சட்டத்தை உடனடியாக நீக்கி நாட்டில் ஜனநாயக தன்மையை உறுதி செய்யவேண்டும். தேவையற்ற கைதுகளை தவிர்க்கவேண்டும். எமது பொதுச்செயலாளர் உடனடியாக விடுவிக்கப்படாவிடில் நாம் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுப்போம்", என்றனர்.

ஆர்பாட்டத்தில் வவுனியா வெளிக்குளம் மகாவித்தியாலம், இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியலாம், சைவிப்பிரகாசா மகளிர் பாடசாலை, முஸ்லிம் மகா வித்தியாலம், தமிழ் மத்திய மகாவித்தியாலம் உட்பட பல பாடசாலைகளில் இந்த கண்டன போராட்டங்கள் இடம்பெற்றன. (ஐ)

## வல்லையில் விபத்து; ஒருவர் படுகாயம்!

வடமராட்சி, ஓக. 05

வல்லைப் பாலத்தில் வழுக்குகையால் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார். அத்துடன், பாலத்தின் கீழே வீழ்ந்து கார் ஒன்று கடுமையாக சேதமடைந்தது.

நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது குறித்து மேலும் அறிய வருவதாவது,

பருத்தித்துறை நோக்கி சென்று கொண்டிருந்த கார் ஒன்று மழை காரணமாக பாலத்தில் ஏற்பட்ட வழுக்குகையால் முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியது.

இதன்போது, மோட்டார் சைக்கிளில் சென்றவர் குதிக்காலுடன் தனது பாதத்தை இழந்ததுடன் மேலும் காயங்களுக்கும் உள்ளானனர்.

மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளிய கார் கட்டுப்பாட்டை இழந்து பாலத்தின்கீழே தலைகீழாக விழுந்தது. இதில் கார் கடுமையாக சேதமடைந்த போதிலும், அதனை செலுத்திய சாரதி தெய்வாதீனமாக உயிர்தப்பினார்.



இந்த விபத்துக் குறித்து அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-3-2)

## நகர அபிவிருத்தி அதிகார சபையின் விசேட நடமாடும் சேவை வடக்கில்!

யாழ்ப்பாணம், ஓக. 05

நகர அபிவிருத்தி அதிகார சபையால் வடக்கில் விசேட நடமாடும் சேவை முன்னெடுக்கப்படவுள்ளதாக அந்த சபையின் வட மாகாண பிரதிப் பணிப்பாளர் திருமதி கவிதா ஜீவகன் தெரிவித்துள்ளார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் இந்த நடமாடும் சேவை இரண்டு கட்டங்களாக முன்னெடுக்கப் படவுள்ளது.

முதலாவது நடமாடும் சேவை யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கி எதிர்வரும் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நகர விருத்தி அதிகார சபையின் வட மாகாண காரியாலயத்தின் முதலாம் மாடியில் நடத்து



வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது நடமாடும் சேவை வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களை உள்ளடக்கி வவுனியா கலாசாரம் மண்டபத்தில் நடத்தப் படவுள்ளது.

இந்த இரு நடமாடும் சேவைகளும் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை இடம்பெறும்.

இந்த நடமாடும் சேவையில் நகர அபிவிருத்தி அதிகார சபையால் நகர அபிவிருத்தி பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பகுதியில் திட்டமிடல் அனுமதிகள் தொடர்பான பிரச்னைகள். அதாவது, கட்டட கட்டுமானம், காணி தொடர்பான பிரச்னைகள் அங்கீகாரமற்ற கட்டடங்கள் மேலும் வேறு கட்டட அனுமதிகள் தொடர்பான பிரச்னைகளுக்கான தீர்வுகளைப் பெற முடியும்.

அபிவிருத்தி திட்டமிடல் அனுமதி தொடர்பாக துறைசார்ந்த திணைக்களங்களின் தலைவர்களின் பங்கு பற்றுதலோடு நடைபெறும் இந்த நடமாடும் சேவையில் பொது மக்கள் பங்கேற்று நன்மைகளைப் பெறமுடியும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-3)

## நாயின் கால்கள், வாலை வெட்டியெறிந்து கொடூரம்!

### புங்குடுதீவு இளைஞர்களுக்கு வலை!

யாழ்ப்பாணம், ஓக. 05

நாய் உயிருடன் இருக்கையிலேயே அதன் நான்கு கால்கள், வாலை வெட்டியதுடன், அந்த நாயை கொடூரமாகக் கொன்ற சம்பவத்துடன் இரு இளைஞர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

புங்குடுதீவில் இடம்பெற்றுள்ள இந்தக் கொடூர சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

புங்குடுதீவு, 9ஆம் வட்டாரத்தை சேர்ந்த இளைஞர் ஒருவர் நாயொன்றை பிடித்து நான்கு கால்கள், வால் என்பவற்றை கோடாரியால் வெட்டி, பின்னர் கட்டையொன்றில் வைத்து அதன் தலையைக் கொத்தும் கொடூர காட்சிகள் சமூகவலைதளத்தில் பகிரப்பட்டது.

அந்த இளைஞர்கள் இந்தக் கொடூர சம்பவத்தை காணொலியாக்கி பதிவிட்டுள்ளனர். இது குறித்து பொலிஸாருக்கு அளிக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து, கொடூர கொலையாளியையும், அதை சமூகவலைதளத்தில் பதிவிட்டவரையும் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# அரசியல் உள்நோக்கத்துடனான கைதுகளை உடன் நிறுத்துங்கள்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, ஓக. 05

"அரசியல் உள்நோக்கத்துடன் அரங்கேற்றப்பட்டு வரும் கைது வேட்டையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடன் நிறுத்த வேண்டும்." - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலினைச் சந்திப்பதற்கு கொழும்பு, கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் நேற்று வியாழக்கிழமை சென்றிருந்தார். அவரைச் சந்தித்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அமைதியாகவும், நாகரிகமாகவும் உழைக்கும் மக்களுக்காகவும், ஆசிரியர் சமூகத்துக்காகவும் போராடிய ஜோசப் ஸ்டாலின் கைதுசெய்யப்பட்டுள்ளபோது, அடக்குமுறையின் தந்தையான மகிந்த ராஜபக்ஷ ஆரோக்கியமாகப் பொழுதைக் கடத்திக் கொண்டிருக்கின்றார்.

மனிதநேயத்தின் பெயரால் நாடு குறித்து சிந்தித்து ஒன்றாக இணைந்து செயல்பட வேண்டிய தருணத்தில், எதேச்சதிகாரமாக அரசியல் பழிவாங்கள்களில் ஈடுபடுவதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இந்த அரச பயங்கரவாதத்தை உடனடியாக நிறுத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றேன். வெடிகுண்டுகள், வாள்கள், துப்பாக்கி ரவைகள் போன்ற ஆயுதங்களால் பிரச்னைகளுக்குத் தீர்வு காணாமல், கலந்துரையாடல் மற்றும் இணக்கப்பாட்டின் மூலம் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும்.



தற்போது வரை தொடரும் வன்முறைச் சுழற்சியை ஆரம்பித்து முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவே. எந்தவொரு குடிமகனும் தான் கருதும் கருத்தைக் கொண்டிருப்பதற்கும், அதற்காக முன் நிற்கவும், பேசவும், ஒன்று கூடவும், அமைதியான முறையில் போராட்டம் நடத்தவும் உரிமையுண்டு.

வன்முறையற்ற அஹிம்சை வழியில் போராடும் உரிமையை யாராலும் மீற முடியாது. ஜோசப் ஸ்டாலின் தனக்குள்ள உரிமைகளை நாட்டுக்காக ஜனநாயக முறையில் பயன்படுத்தினார். அந்த உரிமையை எவராலும் எதிர்க்க முடியாது" - என்றார். (ஐ)

---

கைதடி எரிபொருள் நிலையத்தில்

# துப்பாக்கியை காட்டி எச்சரித்த பொலிஸ்!

தென்மராட்சி, ஓக. 05

கைதடி பல நோக்கு கூட்டுறவு சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு பெற்றோல் நிரப்புவதற்காக வரிசையில் நின்றபோது, அங்கு சீருடையில் நின்ற பொலிஸ் உத்தியோகத்தர் தனது கைத்துப்பாக்கியை எடுத்து கழுத்தில் வைத்து அச்சுறுத்திய தோடு "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்றால் அடங்கி இருக்க வேண்டும்", என்று கூறி எச்சரித்தார் என்று சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் தனபாலசிங்கம் சுதர்சன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து த. சுதர்சன் மேலும் தெரிவித்தவை வருமாறு -

நேற்று முன்தினம் கைதடி ப.நோ.கூ.சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் விநியோகிக்கப்பட்டது. இதன் போது நீண்ட வரிசையில் மக்கள் நின்று எரிபொருளை பெற்றனர்.

இதனிடையே அங்கு கடமையில் நின்ற பிரதேச செயலக உத்தியோகத்தர் தமக்கு தெரிந்தவர்களை வரிசையில் நிற்கவிடாமல் பெற்றோல் நிரப்ப அனுமதித்துள்ளார்.

இதனை அவதானித்து, மக்கள் நீண்ட வரிசையில் நீண்ட நேரம் நின்று எரிபொருள் பெற வருகிறார்கள், ஆனால், நீங்கள் இடையிடையே உங்களுக்கு வேண்டியவர்களை அனுமதிக்கிறீர்கள் அப்படி செய்ய வேண்டாம் என்றேன்.

இதனால் என்னுடன், முரண்பட்ட பிரதேச செயலக உத்தியோகத்தரும் பொலிஸாரும் ஒரு கட்டத்தில் எல்லை மீறி கைத்துப்பாக்கியை எடுத்து எனது கழுத்தில் வைத்து அச்சுறுத்தினார் என்றார்.

இந்த சம்பவம் தொடர்பாக, எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அண்மையிலிருந்த சி. சி. ரீ. வி. கமெரா காணொலியும் வெளியாகியுள்ளது. (ஐ)

---

# தமிழ் முற்போக்கு கூட்டணி ஜனாதிபதியை சந்திக்கிறது

கொழும்பு, ஓக. 05

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தூதுக்குழு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை எதிர்வரும் 11ஆம் திகதி - வியாழக்கிழமை நேரடியாக சந்தித்து மலையக தமிழ் மக்களின் அபிலாசைகள் தொடர்பிலும் தென்னிலங்கையில் வாழும் தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் பொதுவாகவும் கலந்துரையாடவுள்ளது.

"பொருளாதார மற்றும் சமூக ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கான தேசிய சர்வகட்சி வேலைத்திட்டத்தை செயல்படுத்துதல்" தொடர்பில், ஜனாதிபதி தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு விடுத்துள்ள அழைப்பின் பேரிலேயே இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இதேவேளை, இன்று வெள்ளிக்கிழமை திகதி ஐக்கிய மக்கள் கூட்டணியின் தூதுக்குழுவிலும் இடம்பெற்று பொதுவான தேசிய பிரச்னைகள் தொடர்பிலும் கலந்துரையாடுவோம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம். பி. தெரிவித்தார்.

---

# நல்லூர் ஆலயத்துக்கு வருவோர் நகைகள் அணிவதை தவிருங்கள்

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 05

நல்லூர் கந்தன் ஆலயத்துக்கு வருகைதரும் பக்தர்கள் தங்க ஆபரணம் அணிந்து வருவதை தவிர்த்துக் கொள்ளுங்கள் என யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உஜித் லியனகே தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்,

தற்போது நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழா நடைபெறுகிறது. ஆலய வளாகத்தில் தேவையானஅளவு பாதுகாப்பு பொலிசாரினால் வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு விசேட பொலிஸ் அணியும் இங்கே வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தில் மிகவும் முக்கியமான உற்சவமாக நல்லூர் ஆலய உற்சவம் இடம் பெறுவதனால் இந்த ஆலயத்தில் வரும் அடியவர்களின் எண்ணிக்கையும் அதிக அளவில் காணப்படும். ஆலயத்துக்கு வருகின்ற பக்தர்களுக்கு ஒரு கோரிக்கையை முன்வைக்கப்படுகின்றேன் தங்க ஆபரணங்கள் அணிந்து ஆலயத்திற்கு வருவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

ஏனென்றால், அதிக மக்கள் கூடும் இடத்தில் திருட்டு சம்பவங்களும் இடம்பெறலாம். அந்த திருட்டுக்களை தடுப்பதற்கு தங்களுடைய ஒத்துழைப்பு முக்கியம். இந்த திருட்டு சம்பவங்கள் இடம்பெறாமல் தடுப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும்.

திருட்டுச் சம்பவங்களை மேற்கொள்வதற்கு வெளிமாவட்டங்களிலிருந்து ஒரு சிலர் இங்கே அணியாக வந்து செயல்படுவார்கள். எனவே, தங்களுடைய நகைகள் மற்றும் அதிக பணங்களை ஆலயத்துக்கு வரும் போது எடுத்து வருவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

மேலும், பொதுமக்களின் அசண்டையீனத்தாலேயே அதிக திருட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-3)

---

# ஊர்காவற்றுறை எரிபொருள் நிலைய பம்பி இயக்குநரை மாற்ற வேண்டும்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 05

மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், சுகாதார உத்தியோகத்தர்களுடன் தொடர்ந்து மரியாதை இன்றி நடக்கும் ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தின் எரிபொருள் நிலைய பம்பி இயக்குநரை மாற்ற வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அவர் மீது விசாரணை நடத்தி வரும் செப்ரெம்பர் முதலாம் திகதிக்கு முன்பாக உரிய நடவடிக்கை எடுக்காத விடத்து இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் ஊடாக எரிபொருள் பெறும் தீவகத்தின் மருத்துவமனைகள் எந்த முன்னறிவிப்புமின்றி தொழில்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் என்றும் அந்தச் சங்கம் எச்சரித்துள்ளது.

இது குறித்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் - தீவகத்துக்கான சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு,

ஊர்காவற்துறை எரிபொருள் நிரப்பு நிலைய பம்பி இயக்குநரும் முகாமையாளரும் மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள் மற்றும் ஏனைய சுகாதார ஊழியர்களிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டமை தொடர்பான கூட்டம் கடந்த முதலாம் திகதி வட மாகாண பிராந்திய சுகாதார பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் வட மாகாண பிராந்திய சுகாதார பணிப்பாளர், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பிராந்திய பணிப்பாளர், கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தீவக மருத்துவ மனைகளுக்கான கிளை சங்கத்தின் அதிகாரிகள், ஊர்காவற்துறை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர், பொது மேலாளர், செயலாளர் ஆகியோர் பங்கு பற்றினர்.

எரிபொருள் நிரப்பு நிலைய பம்பி இயக்குநர் மருத்துவமனை ஊழியர்களை மரியாதைக் குறைவாக பேசும் பண்பு தொடர்ந்து அதிகரித்து வருவதால் அவரை மாற்ற வேண்டும் என்று எமது சங்கத்தின் அதிகாரிகள் கோரிக்கை வைத்தனர். மேலும் சமூகத்தில் எரிபொருள் வழங்குதலை காட்டிலும் மருத்துவர்களின் கண்ணியம் முக்கியமாகும் என்பதை அவர்கள் வலியுறுத்தினர்.

சுகாதார சேவையானது அத்தியாவசிய சேவை என அரசினால் அறிவிக்கப்பட்டு சுகாதார அமைச்சானது சுற்று நிருபங்கள் வழங்கி ஒவ்வொரு மாகாணத்துக்கு பொறுப்பான ஆளுநர் மற்றும் பிரதம செயலாளர் ஆகியோர் தமது பிரதேச அரச அதிகாரிகள் மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துடன் இணைந்து ஒவ்வொரு எரிபொருள் நிரப்புநிலையத்திலும் பத்து சதவீதத்தை சுகாதார ஊழியர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்க ஏற்பாடு செய்துள்ளனர்.

இருந்த போதிலும் கடந்த மூன்று மாதங்களாக குறித்த ஒரு எரிபொருள் பம்பி இயக்குநர் மட்டும் எரிபொருள் பெற்றுக்கொள்ள செல்லும் மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனை ஊழியர்களை வார்த்தைகளால் மரியாதை குறைவாக தொடர்ந்து துன்புறுத்தி வந்துள்ளார். வேண்டுமென்று எரிபொருள் வைத்துக் கொண்டும் வழங்க மறுத்த சந்தர்ப்பங்களும் உண்டு.

மேலும், குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் பம்பி இயக்குநர் மீது செப்ரெம்பர் 1 ஆம் திகதிக்குள் உள்ளக விசாரணையை முடித்து எரிபொருள் நிரப்பு நிலைய பம்பி இயக்குநர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் யாழ்ப்பாணத் தீவக மருத்துவமனைகளில் இப்பெற்றோல் நிலையம் மூலமாக எரிபொருளை பெற்றுக்கொள்ளும் வைத்தியசாலைகளான ஊர்காவற்துறை, வேலணை மற்றும் காரைநகர் வைத்தியசாலைகள் எந்தவித முன்னறிவித்தலும் இன்றி தொழிற்சங்க நடவடிக்கைக்கு செல்வதை தவிர்க்க முடியாததாகிவிடும் என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தேர்தல் தொகுதி முறைமையும் மலையக தமிழருக்கு பாரபட்சமே

## மலையக அரசியல் அரங்கம்

கொழும்பு, ஓக. 05

நிர்வாகத் தொகுதிகள் போன்றே தேர்தல் தொகுதி முறைமையும் மலையகத் தமிழருக்கு பாரபட்சமானதாகவே உள்ளது என்று நுவரெலியா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான மயில்வாகனம் திலகராஜா தெரிவித்துள்ளார்.

தேர்தல் சீர்திருத்தத்தை யதார்த்தமாக்கிக் கொள்ளும் நோக்கில், பவ்ரல் அமைப்பு இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தெரிவுக்குழு அறிக்கை குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

தேர்தல் தேவைகளுக்காக தொகுதி எல்லை மீள்நிர்ணயத்தை மறுசீரமைக்காது கலப்பு தேர்தல் முறைமையை அறிமுகம்செய்வது மலையகத் தமிழருக்கு பாதகமானது. ஏனெனில், நிர்வாகத் தொகுதி பொறிமுறை மாத்திரமல்ல தேர்தல் தொகுதி முறைமையும் மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் பாரபட்சமானதாகவே உள்ளது.

தேர்தல் முறைமை மாற்றம் குறித்த பாராளுமன்ற தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கை வெளிவந்துள்ள போதும் அதனை இன்னும் பாராளுமன்றம் விவாதித்து உறுதி செய்யவில்லை. அதனை உறுதி செய்தால் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு அதனை நடைமுறைப்படுத்தும் சாத்தியம் உள்ளது.

எனவே, அதனை பாராளுமன்றில் இறுதிசெய்வதற்கு முன்பதாக அதில் உடன்பாடு தெரிவிக்கப்படாத விடயம் குறித்து கவனம் செலுத்துதல் வேண்டும். அந்த அறிக்கையிலே 80 சதவீதமான விடயங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயங்களைக் குறிப்பிட்டு 20 சதவீதமான உடன்பட முடியாத விடயங்களையும் உள்ளீர்த்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றினால் அது சிக்கலை ஏற்படுத்துவதாக அமையும். இந்த இருபது சதவீத பகுதியில்தான் தேர்தல் முறைமையும் எல்லை மீள்நிர்ணயமும் அடங்குகிறது.

இனத்தின், மதத்தின், மொழியின் பெயரில் எனும் அடிப்படையில் கட்சிகளை அமைக்கக் கூடாது என பரவலாக பேசப்படுகிறது. ஆனால், மலையகத் தமிழரைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளின் நோக்கம் இனத்தை பிரதிநித்துவம் செய்வதற்கு அப்பால் அவர்களுக்கு குடியுரிமைப் பறிப்பால் ஏற்பட்ட அநீதியால் ஏற்பட்ட உரிமை மறுப்புகளை மீட்பதற்கான அரசியல் செயல்பாடாகவே அமைதல் வேண்டும். அந்தவகையில் அரச நிர்வாக பொறிமுறையை மக்களுக்குக் கொண்டு சேர்க்கும் பிரதேச செயலகம் தொகுதிகள் மட்டுமல்ல, மக்களை பிரிதிநிதித்துவம் செய்யும் சபைகளுக்கான வாக்காளர் தொகுதி உருவாக்கத்திலும் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக குடியுரிமைப் பறிப்பினால் ஏற்படுத்தப்பட்ட பின்னடைவுகளுக்கு பிராயச்சித்தமாக சிறு தொகுதிகளை அமைத்து அவர்களுக்கு சமவாய்ப்பு வழங்கப்படல் வேண்டும். இது குறித்த யோசனைகளை சிவில் சமூகங்களுடன் இணைந்து நாம் தெரிவுக் குழுவுக்கு வழங்கி இருந்தோம். ஆனால், பாராளுமன்ற தெரிவுக்குழு அறிக்கையிலே எல்லை மீள்நரணயம் குறித்து தெளிவாக ஏதும் பேசப்படவில்லை. அதனால் எல்லை மீள்நிர்ணயம் குறித்து தீர்க்கமான வடிவமைப்பைச் செய்து தொகுதிகளை உறுதி செய்த பின்னரே கலப்பு தேர்தல் முறைமையை ஏற்றுக் கொள்வதா இல்லையா எனும் தீர்மானத்துக்கு வரமுடியும் - என்றார். (கே)

# போராட்ட களத்தை விட்டு வெளியேறவே மாட்டோம்!

## கோட்டா கோ கமவினர் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 05

**கோட்டா கோ கம ஆர்ப்பாட்டக்காரர்கள் இன்று வெள்ளிக்கிழமை மாலை ஐந்துமணிக்கு முன்னர் அந்த பகுதியிலிருந்து வெளியேற வேண்டும் என்று பொலிஸார் விடுத்த உத்தரவை ஏற்பதற்கு மறுத்துள்ளனர்.**

காலிமுகத்திடல் பகுதியிலிருந்து வெளியேறவேண்டும் என்ற உத்தரவை நீதிமன்றம் வழங்கவில்லை என ஆர்ப்பாட்டக் காரர்களில் ஒருவரான ஜனஹ ஜனஹ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை செவிமடுப்பதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் தயாரில்லை. நாங்கள் தற்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள பகுதியை முன்னைய அரசாங்கம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கான பகுதியாக அறிவித்திருந்தது என்று அவர் தெரிவித்துள்ளார்.



கோட்டா கோ கம ஆர்ப்பாட்டக்காரர்கள் அந்த பகுதியிலிருந்து இன்று வெள்ளிக்கிழமை மாலை ஐந்து மணிக்கு வெளியேற வேண்டும் என பொலிஸார் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வெள்ளைமாவடி பிள்ளையார் ஆலய திருப்பணி சபை அங்குரார்ப்பணம்!

தென்மராட்சி, ஓக. 05

மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவிலின் திருப்பணிச் சபையின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த செவ்வாய்க் கிழமை ஆலயக் கொடியேற்றத் திருவிழாவின் நிறைவில் இடம் பெற்றது.

திருப்பணிச் சபை உறுப்பினரும் பாடசாலை அதிபருமான தி. அபராஜிதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆலய முகாமையாளர் சி. இராமலிங்கம் முன்னிலை வகித்தார். ஆலய மகோற்சவ குரு சிவஸ்ரீ சி. கிருபாகரக் குருக்கள் ஆசியுரை



வழங்கினார். செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசன் - ஆலயத்தின் தொன்மை மற்றும் பெருமைகள் குறித்துச் சிறப்புரை ஆற்றினார். சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் அ. கயிலாயபிள்ளை நிறைவுரை ஆற்றினார்.

ஆலயத்தின் உள்வீதிக் கொட்டகை மற்றும் நிலம் என் பவற்றைப் புனரமைக்கும் திருப்பணி வேலைகள் இடம் பெறவுள்ளன. இதற்கு முதற் கட்டமாக ஆலய அடியவர்கள் ஆலய முகாமையாளரிடம் சம்பிரதாயபூர்வமாகத் தமது திருப்பணிசார் பங்களிப்புகளை வழங்கினர். ஆலய பக்தர்களாக உள்ள இளைஞர்களை உள்ளடக்கி திருப்பணிச் சபை அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மாவை கந்தன் ஆலயத்தில் கோடி நாமாஞ்சலி ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஓக. 05

வரலாற்று சிறப்புமிக்க மாவிட்டபுரம் அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோயிலில் ஹிரண்யம், புஷ்பபத்மம், பஞ்சவில்வபத்ரம், ருத்திராக்ஷம், மூலிகைகள் சகிதம் கோடி நாமாஞ்சலி கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. இந்த நாமாஞ்சலி எதிர்வரும் 2023 ஜனவரி 26ஆம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெறவுள்ளது. இவ்வாறு ஆலய தர்ம கர்த்தா மகாராஜாஸ்ரீ து.ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

தினமும் 10 சண்முகார்ச்சனை என அதிகாலை 5 மணி முதல் தொடர்ந்து இரவு 9.30 மணிவரை 179 நாள்களில் கோடி நாமாஞ்சலி சகிதம் ஆராதனைகள் நடைபெற மாவைக் கந்தன் திருவருள் பாலித்துள்ளார்.

இந்த வைபவத்தில் மெய்யன்பர்கள் யாவரும் குடும்ப சகிதமாக கலந்து உபயங்களை ஏற்று நடத்தி தாங்கள் நினைத்த நற்காரியங்கள் சித்திபெற மாவைக் கந்தபெருமான் பாதங்களை வணங்கி அவரின் திருவருட் கடாட்சங்களை பெற்று ஆனந்தமாய் சுகமாக வாழ மாவைக் கந்தன் அருள்பாலித்துள்ளார்.

சுகவாழ்வு வாழ, தொழில் இலாபம் பெற, சந்தானம் பெருக, நிலம் அமைய, வியாபாரம். விவசாயம் தொடங்க - விருத்தியடைய, குடும்ப சகிதமாக நல்வாழ்வுவாழ, கல்வி பெருக, களத்திரதோஷம் திருமாங்கல்ய தோஷம் நீங்க, சகல சாபங்கள்- பாவங்கள் நிவர்த்தியாக, பிரயாண தடங்கல் நீங்க, பொன், தங்கம், வெள்ளி, இரத்தினம் பொருள் பெருக, அபிவிருத்தி அதிர்ஷ்ட லாபம் பெற, சகல ஜீவராசிகள் சுக வாழ்வு வாழ, சகல கஷ்டங்கள், தொல்லைகள் அகன்று நினைத்த நற்காரியங்கள் கைகூட, உலகத்தில் அமைதி, சாந்தி நிலவி ஒற்றுமை மேலோங்க, நோயற்ற நீண்ட வாழ்வும், குறைவற்ற செல்வமும் பெற, அகிலத்தில் வாழும் மக்கள் இன, மத, மொழி, வேறுபாடுகள் இன்றி அமைதியாக ஒற்றுமையாக வாழ்க்கை வாழ வேண்டி, சூரிய, சந்திர, நட்சத்திரங்கள், ஆத்மா, பஞ்சபூதங்களுடன் இஷ்டதெய்வங்கள், குலதெய்வங்களின் ஆசிகள் பெறவும் இந்த ஆராதனை நிகழ்வுகளில் மெய்யன்பர்கள் யாவரும் குடும்பசகிதமாக கலந்து கொள்வதோடு உபயங்களை ஏற்று நடத்த விரும்புபவர்கள் ஆலய தொலைபேசி இலக்கங்களான021-2243334, 077-1042257 தொடர்பு கொள்ளுமாறும் வேண்டப்படுகின்றீர்கள் - என்றுள்ளது.

# நாட்டின் மின் பாவனை 20 வீதத்தால் குறைந்தது

கொழும்பு, ஓக. 05

இலங்கையில் மின்சார அலகுகளின் பாவனை 20 வீதத்தால் குறைந்துள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆறு மாதங்களுக்கு முன்னர் மின் பாவனையாளர்கள் நாளொன்றுக்கு 48 மில்லியன் அலகுகள் மின்சாரத்தை பயன்படுத்தி வந்தனர். தற்போது இது, 38 மில்லியனாக குறைந்துள்ளது.

இந்த ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்தார்.

இதற்குக் காரணம், பல மாதங்களாக நிலவும் மின்வெட்டு மற்றும் நுகர்வோரின் குறைந்தளவான மின்பாவனையே எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# துணிந்து நிற்குமா தாய்வான்:

## இறையாண்மையை மீறும் சீனாவும் எல்லைகளை மீறும் அமெரிக்காவும்

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**



**25** ஆண்டுகளுக்கும் மேலாக தாய்வானுக்குச் சென்ற முதல் அமெரிக்க இராஜாங்க அதிகாரி நான்சி பெலோசி விஜயம் இப்பிராந்தியத்தின் பதற்றத்தை மேலும் உயர்த்தி உள்ளது.

புதன்கிழமை தாய்வானில் இருந்து ஆதரவு செய்தியுடன் வெளியேறிய அவரின் விஜயம், நீண்ட காலத்திற்குப் பிறகு, பதட்டங்களை அதிகரிக்கும் அச்சுறுத்தலாக சீனா கண்டித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்க அதிகாரி நான்சி பெலோசி இப்பிராந்தியத்தின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க அமெரிக்கா உதவும் என்று கூறியுள்ளார்.

திருமதி பெலோசியின் வருகைக்கு எதிர்க்கும் வண்ணம் சீனாவின் பதில் இராணுவ மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் தாய்வானை பாதிக்கும் என்றே எதிர்பார்க்கபடுகிறது.

**போர் என்று பொருள்:**

சீனா - தாய்வான் பதற்றமான இவ்வேளையில் தாய்வானை சுதந்திர நாடாக அறிவிக்கும் முயற்சிக்கு “போர் என்று பொருள்” சீனா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சமீப காலமாக தாய்வானை ஒட்டிய பகுதிகளில் தனது ராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வரும் சீனா, அங்கு போர் விமானங்களை இயக்கி சர்ச்சைக்கு வித்திட்டுள்ள நிலையில், இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறது.

அமெரிக்காவின் அதிபர் ஜோ பைடன், தாய்வானுக்கு உதவுவது குறித்து தங்களது நிலைப்பாட்டை வெளிப்படுத்திய பின், இந்த எச்சரிக்கை வெளிவந்துள்ளதையும் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது.

சீனாவின் இந்த எச்சரிக்கை துரதிர்ஷ்டவசமானது, என அமெரிக்கா கூறியுள்ளது.

**சீனா - தாய்வான் பிரச்சனை:**

1949-ம் ஆண்டு நடந்த சீன உள்நாட்டுப் போருக்குப் பிறகு, சீனா மற்றும் தாய்வான் ஆகிய இரண்டும் தனித் தனியே அரசாங்கங்களை நடத்தி வருகிறார்கள்.

ஆயினும் தாய்வானின் சர்வதேச நடவடிக்கைகளைத் தடுக்க கடந்த பல ஆண்டுகளாக சீனா முயற்சித்து வருகிறது. அமெரிக்கா - சீனா இரண்டு தரப்பினருமே பசிஃபிக் பிராந்தியத்தில் ஆதிக்கம் செலுத்துவது யார் என்பதில் தொடர்ந்து முரணாக ஈடுபட்டு வருகிறார்கள்.

கடந்த சில ஆண்டுகளாக இந்த பிரச்சனையின் தீவிரம் அதிகரித்த வண்ணம் உள்ளது. தாய்வானை கட்டுப்படுத்த சீனா தன் பலத்தையும் பயன்படுத்தவும் சளைக்காது என்ற சூழ்நிலை நிலவுகிறது.

தாய்வானை சில நாடுகள் மட்டுமே அங்கீகரித்தாலும், தாய்வானில் ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம், உலக நாடுகளுடன் வலுவான வணிக மற்றும் முறைசாரா உறவுகளை கொண்டுள்ளது. அமெரிக்காவும் உலகின் பெரும்பாலான நாடுகளை போலவே தாய்வானுடன் ராஜீய ரீதியில் தொடர்பை கொண்டுள்ளது. ஆனால் அமெரிக்க சட்டம் ஒன்று, தாய்வான் தன்னை பாதுகாத்துக் கொள்ளத் தேவையான உதவிகளை வழங்க வழிவகை செய்கிறது.

**தாய்வான் உருவாக்கம்:**

இரண்டாம் உலக போரின் முடிவில் ஜப்பானிய தோல்வியின் பின்னர் சீனா தாய்வானை திரும்ப பெற்றது.

எனினும் சீன உள்நாட்டு யுத்தம் 1950 இல் முடிவடையும் போது சீன கம்யூனிசக் கட்சி சீன பெருநிலப்பரப்பின் பெரும் பிரதேசத்தை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. சீனக் குடியரசோ



தாய்வான் உட்பட சில தீவுகளை மட்டுமே கொண்டிருந்தது. சீன கம்யூனிச கட்சி 1949இல் பீஜிங்கில் மக்கள் சீனக் குடியரசு என்ற புதிய நாட்டை பிரகடனப்படுத்தியது.

சீனா அரசு மங்கோலியா எல்லை பகுதிகள், தாய்வான் ஆகியவற்றை சொந்தம் கொண்டாடி வந்தாலும் 1960 இல் ஊழல்களை குறைத்து பொருளாதார சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தது. இதன் காரணமாக நாட்டில் யுத்த அபாயமும் குழப்பநிலையும் தொடர்ந்த போதும் பொருளாதாரம் மிக வளர்ச்சி கண்டது. 1980 மற்றும் 1990 இல் சீன குடியரசான சனநாயக முறைக்கு மாறுவதற்கான தொடர்ந்த ஈடுபாடு காரணமாக அரசியல் புது வடிவைக் கண்டது. இதன் படி 1996 இல் அது முதலாவது அதிபர் தேர்தலை நடத்தியது. 2000 ஆம் ஆண்டு தேர்தல் மூலமாக கட்சி சார்பற்ற ஒருவர் முதல் முறையாக அதிபராக பதவியேற்றார்.

**பொருளாதார வளர்ச்சியில் தாய்வான்:**

20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தாய்வான் விரைவான பொருளாதார வளர்ச்சி மற்றும் தொழில் அனுபவம் காரணமாக ஒரு மேம்பட்ட தொழில் துறை பொருளாதார சக்தியாக உள்ளது. தாய்வான் “நான்கு ஆசிய புலிகள்” எனப்படும் நாடுகளுள் ஒன்றாகவும் மற்றும் உலக வணிக அமைப்பு,ஆசிய பசுபிக் பொருளாதார அமைப்பிலும் உறுப்பினராக உள்ளது.

இது உலகின் 19 வது பெரிய பொருளாதார நாடாகவும் அதன் மேம்பட்ட தொழில்நுட்ப துறை மூலம் உலக பொருளாதாரத்தில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் தாய்வானில் பத்திரிகை சுதந்திரம், சுகாதாரம், பொது கல்வி, பொருளாதார சுதந்திரம் மற்றும் மனித வளர்ச்சி ஆகியவற்றில் உயர்ந்த இடத் தில் உள்ளது.

**சுதந்திர நாடாக தாய்வான்:**

தனி அரசியலமைப்புச் சட்டம், ராணுவம், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களைக் கொண்டிருப்பதால் தன்னை ஒரு தனி நாடாக தாய்வான் பறைசாற்றிக் கொள்கிறது. ஆயினும் தாய்வானை எளிதில் வீழ்த்தக் கூடிய பிராந்தியமாகப் பார்க்கிறது சீனா.

தாய்வான் அரசு, அந்த நாட்டை ஒரு சுதந்திர நாடாக ஒரு முறைப்படி அறிவிப்பதற்கான நடவ டிக்கையில் ஈடுபட்டு வருவது குறித்து சீனா கண்டனம் கொண்டுள்ளதாக வல்லுநர்கள் கருதுகிறார்கள்.

ஆயினும் தாய்வான் ஏற்கனவே ஒரு சுதந்திர நாடு, அதை மீண்டும் சுதந்திர நாடாக பிரகடனப்படுத்துவது தேவையற்றது என கூறுகிறது அந்நாட்டு அரசு.

அமெரிக்க இராஜாங்க அதிகாரி நான்சி பெலோசி விஜயத்தை அடுத்து, சீனா பாதுகாப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர் தெரிவிக்கையில் தாய்வானுக்கு அருகில் சீனாவின் ராணுவ நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் வகையில் கருத்துத் தெரிவித்திருந்தார். தாய்வான் நீரிணையில் நிலவும் தற்போதைய பாதுகாப்புச் சூழலில் இந்த ராணுவ நடவடிக்கைகள் அவசியம் எனவும், தேசத்தின் பாதுகாப்பை உறுதி செய்ய இந்த நடவடிக்கைகள் தேவைப் படுவதாகவும் அவர் கூறினார்.

அந்நிய சக்திகளின் தலையீடுகள் தாய்வான் சுதந்திர படைகளின் தூண்டுதலுக்கும் இது தக்க பதிலடி என ஒருபடி மேலே சென்று, “தாய்வானின் சுதந்திரம் தொடர்பாக பேசுபவர்களை எச்சரிக்கிறோம். நெருப்போடு விளையாடுபவர்கள், தங்களைச் சுட்டுக் கொள்வார்கள். தாய்வான் சுதந்திரம் என்றால் போர் எனப் பொருள்” என்று நேரடி எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

**எல்லை மீறும் அமெரிக்கா:**

சீனாவின் இந்த எச்சரிக்கை தொடர்பாக, அமெரிக்க பதிலளித்தது.

“சீனாவின் கருத்து துரதிர்ஷ்டவசமானது” என பென்டகனின் ஊடகச் செயலர் கூறியுள்ளார். தாய்வான் விவகாரம் “போர் போன்ற சூழலை நோக்கிச் செல்ல எந்த காரணமும் இருப்பதாக தெரியவில்லை” என பென்டகன் கருதுவதாக அவர் தெரிவித்திருந்தார்.

ஏற்கனவே அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு இடையிலான உறவு நல்ல நிலையில் இல்லை என்றாலும் மனித உரிமை பிரச்சனைகள், வர்த்தகப் பிரச்சனைகள், ஹாங்காங் விவகாரம், தாய்வான் விவகாரம் என சீனா மீது தொடர்ந்து அழுத்தம் கொடுக்க ஜோ பைடன் தலைமையிலான அமெரிக்க நிர்வாகம் விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

**துணிந்து நிற்குமா தாய்வான் ?**

தாய்வானின் இறையாண்மையை மீறும் சீனாவும், உலகப் பொலிஸ்காரனாக தன்னை வியாபித்து மற்றய நாடுகளின் உள்ளக பிரச்சனைகளில் தலையீட்டு, எல்லைகளை மீறும் அமெரிக்காவின் செயற்பாடுகளால் இப்பிராந்தியத்தின் பதற்றத்தை மேலும் உயர்த்தி உள்ளது என்பதே உண்மையாகும்.



# இலங்கையின் மீளெழுச்சிக்கு இந்தியாவின் "உயிர் மூச்சே" காரணம்

## ரணில் விக்ரமசிங்க

இந்தியா உள்ளிட்ட நாடுகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில், சீனாவின் கண்காணிப்பு கப்பல் எதிர்வரும் 11ம் திகதி இலங்கைக்கு வருகைத் தரவுள்ள நிலையில், நாட்டின் பொருளாதார மீளெழுச்சிக்கு இந்தியாவின் "உயிர் மூச்சே" காரணம் என இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தரிருக்கிறார்.

இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளெழுவதற்கு, இந்தியா வழங்கிய "உயிர் மூச்சே" காரணம் என ரணில் விக்ரமசிங்க, தனது கொள்கை பிரகடன உரையில் கூறினார்.

9வது நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரை நெற்று முன்தினம் (03) ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

"மீளெழும் முயற்சியிலே எமது அயல் நாடான இந்தியா வழங்கிய ஒத்துழைப்பு தொடர்பாக நான் விசேடமாக இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். இந்திய பிரதமர் நரேந்திர மோதி தலைமையிலான இந்திய அரசாங்கம் எமக்கு வழங்கிய உயிர் மூச்சுக்கு நான் இலங்கை மக்கள் சார்பாக இந்திய பிரதமருக்கும், இந்திய அரசாங்கத்திற்கும், இந்திய மக்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்" என ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

பாதாளத்தில் வீழ்ந்த நாட்டைதான் பொறுப்பேறுக்கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், நாட்டை பொருளாதார ரீதியில் முழுமையாக மீட்டெடுப்பதற்கு சர்வ கட்சி அரசாங்கமொன்றை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், ஒரு கட்சி மாத்திரமன்றி, அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைத்துக்கொண்டு, பொருளாதார நெருக்கடியை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டார்.

"நான் கஷ்டத்தில் விழுந்திருந்த ஒரு நாட்டையே பொறுப்பேற்றேன். கடுமையான பொருளாதாரப் பிரச்னை ஒருபுறம். பாரிய மக்கள் எதிர்ப்பு மறுபுறம். எனினும் நாட்டுக்காக இந்த கடினமான சவாலை பொறுப்பேற்க நான் தீர்மானித்தேன். அதற்குக் காரணம் இருளுக்கு சாபமிட்டுகொண்டு இருப்பதை விட ஒரு விளக்கினையேனும் ஏற்றுவது நாட்டிற்காக நான் செய்யும் கடமை என நான் கருதியமையாகும்" என்றார்.

இலங்கைக்கு 1977ம் ஆண்டு புதிய பொருளாதார கொள்கை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், காலத்திற்கு பொருந்தக்கூடிய வகையில், அதனை நவீனமயப்படுத்த முடியவில்லை என அவர் குறிப்பிட்டார்.

யுக்ரேன் யுத்தம் மற்றும் கோவிட் தொற்று ஆகியவை காரணமாக உலக பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டதாகவும், அந்த நெருக்கடிகள் இலங்கையை மேலும் சிக்கலுக்குள் தள்ளியதாகவும் ரணில் விக்ரமசிங்க தெரிவிக்கின்றார்.

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக பொறுப்பேற்றதன் பின்னர், முன்னெடுத்த நடவடிக்கைகள் குறித்தும் அவர் இதன்போது கருத்துரைத்தார்.

"தற்போதுள்ள மின் வெட்டினை குறைத்துக் கொள்ள எம்மால் முடிந்துள்ளது. பயிர்செய்கைக்காக எதிர்காலத்தில் தேவைப்படும் உரத்தைக் கொண்டு வருவதற்கான பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. சமையல் எரிவாயு பிரச்னை தற்போது முழுமையாக தீர்க்கப்பட்டுவரும் நிலையில் உள்ளது. வரிசையில் காத்திருக்காது சமையல் எரிவாயுவை இன்னும் சில தினங்களில் அனைவராலும் பெற்றுக் கொள்ள முடியும். உணவுத் தட்டுபாடொன்று ஏற்படாதவாறு அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மருத்துவமனைகளுக்கு தேவையான மருந்து வகைகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் என்பவற்றினைக் கொள்வனவு செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதித்துறை என்பவற்றிற்கு ஏற்பட்டுள்ள தடைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன," என ரணில் விக்ரமசிங்க கூறினார்.

### எரிபொருள் தட்டுப்பாட்டு எவ்வாறு தீர்க்கப்படும்?

எரிபொருள் தட்டுப்பாடு குறித்து பேசிய ரணில்



இந்த ஆண்டு இறுதிவரை அதை பொறுத்துக் கொள்ள வேண்டும் என்றார்.

"தற்போது நமது முன்னால் உள்ள குறுங்கால பிரச்னை எரிபொருள் தட்டுப்பாடாகும். எரி பொருளை கொண்டு வருவதற்காக ஏனைய நாடுகளிடமிருந்து கடன் உதவிகள் கிடைக்கும் வரையில் காத்திருக்கும் முறைமையிலே நாம் முடிவுக்கு கொண்டு வருதல் வேண்டும் எனவே நமது நாட்டின் ஏற்றுமதி வருமானம் மற்றும் வெளிநாட்டு நாணய மாற்று ஊடாக எரிபொருளை கொண்டு வருவதற்கான முறைமை ஒன்றினை நாம் ஆரம்பிக்க உள்ளோம்.

இதன்போது எரிபொருளுக்கான கொடுப்பன வினை சமப்படுத்திக்கொள்வதற்காக தேர்ந்தெடு இறக்குமதிகளை வரையறுத்துக்கொள்ள வேண்டி யும் எமக்கு ஏற்படும். மறுபுறமாக எரிபொருள் விநியோகத்தை மட்டுப்படுத்த வேண்டியும் ஏற்படும். எனவே இந்த ஆண்டின் இறுதி வரையில் இந்த கஷ்டத்தினை நாட்டுக்காக நாம் தாங்கிக்கொள்ளல் வேண்டும்" என அவர் குறிப்பிட்டார்.

### ரணில் விக்ரமசிங்கவின் எதிர்காலம் திட்டம் என்ன?

"இந்த கஷ்டங்களிலிருந்து மீளுவதற்கு நாம் நீண்ட கால தீர்வுகளை நோக்கிப் பயணித்தல் வேண்டும். மீண்டும் ஒருபோதும் நமது நாட்டில் இவ்வாறான பொருளாதார நெருக்கடியொன்று ஏற்படாதவாறு பலமிக்க அடித்தளமொன்றினை இடுதல் வேண்டும். பொருளாதாரத்தை நவீனமயப் படுத்துதல் வேண்டும். பொருளாதார ஸ்திரத்தன்மையினை ஏற்படுத்தி, போட்டித்தன்மைமிக்க சந்தைப் பொருளாதாரம் ஒன்றின் பக்கம் மாற்றியமைத்தல் வேண்டும்.

அவற்றிற்குத் தேவையான அறிக்கைகள், திட்டமிடல், சட்டதிட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றினை தற்போது நாம் தயாரித்து வருகின்றோம். நான் இன்று உங்கள் முன்னிலையில் தெளிவுபடுத்துவது எங்கள் எதிர்காலத்துக்கு அடிப்படையாகும் திட்டமிடல் சட்டகமாகும். இச்சட்டகத்தினுள் நாம் நடைமுறைப்படுத்தும் செயல்திட்டங்கள் என்பவை தொடர்பான விபரமான தகவல்கள் எதிர்காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் இடைக் கால வரவுசெலவு மற்றும் 2023ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தினூடாக முன்வைக்கப்படும்." என அவர் குறிப்பிட்டார்.

மேலும் பொய்யான கருத்துக்களை வெளியிட்டமையினால், வெளிநாட்டு முதலீடுகளை தடை செய்து, நாட்டுக்கு ஏற்படுத்திய இழப்பு கணிப்பிட முடியாத அளவுக்கு விசாலமானது என ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இந்தியாவோடு ஒன்றிணைந்து, திருகோணமலை எரிபொருள் தாங்கிகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும் போது, இந்தியாவுக்கு இலங்கையை விற்கின்றார்கள் என கூறி அபிவிருத்தி திட்டங்களுக்கு இடையூறு விளைவித்ததாகவும் அவர் கூறினார்.

எரிபொருள் தாங்கிகளை அபிவிருத்தி செய்வதற்கு அன்று சந்தர்ப்பம் கிடைத்திருக்கும் பட்சத்தில், எரிபொருள் வரிசைகளில் மக்கள் இன்று நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய அவசியம் இருந்திருக்காது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதேபோன்று, இந்தியாவின் உதவித் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட சுவசெரிய அம்பியூலன்ஸ் வண்டி சேவைக்கும் பாரிய எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்ட தாகவும், தாம் கடும் பிரயத்தனங்களுக்கு மத்தியில் அதனை செயற்படுத்தியமையினால், பல்லாயிரக் கணக்கான உயிர்களை காப்பாற்ற முடிந்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

> **கஷ்டங்களிலிருந்து மீளுவதற்கு நாம் நீண்ட கால தீர்வுகளை நோக்கிப் பயணித்தல் வேண்டும். மீண்டும் ஒருபோதும் நமது நாட்டில் இவ்வாறான பொருளாதார நெருக்கடியொன்று ஏற்படாதவாறு பலமிக்க அடித்தளமொன்றினை இடுதல் வேண்டும். பொருளாதாரத்தை நவீனமயப் படுத்துதல் வேண்டும். பொருளாதார ஸ்திரத்தன்மையினை ஏற்படுத்தி, போட்டித்தன்மைமிக்க சந்தைப் பொருளாதாரம் ஒன்றின் பக்கம் மாற்றியமைத்தல் வேண்டும்.**

அமைதியான போராட்டத்திற்கு தான் ஆதரவு வழங்குவதாகவும், போராட்டக்காரர்களை வேட்டை யாட போவதாக கூறப்படும் கருத்து போலியானது எனவும் அவர் கூறுகின்றார்.

### தமிழர்களின் பிரச்னைக்கு தீர்வு?

"பல வருட காலமாக தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பிரச்னைகளுக்கு அரசியல் தீர்வினைப் பெற்றுக்கொடுக்க வேண்டியமை அத்தியாவசியமான காரணி ஒன்றாகும். யுத்தத்தின் மூலம் பாதிக்கப்பட்ட அவர்கள் சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்னைகள் பலவற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். தீர்க்க வேண்டிய காணிப் பிரச்னைகள் பல உள்ளன.

வடக்கின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக நாம் புதிதாக சிந்திக்க வேண்டியுள்ளது. வெளிநாடுகளில் வாழுகின்ற இலங்கை தமிழ் மக்களுடன் நெருங்கிச் செயற்பட்டு, இலங்கையினை மீளக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்திற்கு அவர்களது ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கும் நாம் எதிர்பார்க்கின்றோம்" என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.



# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

**மாதிரிப் பரீட்சை வினாத்தாள்**

**36)** பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

**37)** நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

**38)** தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

**39)** கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


**40)** இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

**41)** அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

**42)** பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

**43)** கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

**44)** எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

**45)** 

படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடியாக நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

**46)** நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

**47)** மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

**48)** சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

**49)** எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

**50)** காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

**51)** பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

**52)** தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

**53)** மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

**54)** சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

**55)** பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

**56)** காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

**57)** கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஓரிகாமி 3) அலப்பறை

**58)** உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

**59)** குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

**(30 புள்ளிகள்)**

**60)** பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **36.** | 3 | **37.** | 1 | **38.** | 1 |
| **39.** | 2 | **40.** | 3 | **41.** | 3 |
| **42.** | 1 | **43.** | 3 | **44.** | 3 |
| **45.** | 2 | **46.** | 3 | **47.** | 2 |
| **48.** | 2 | **49.** | 3 | **50.** | 2 |
| **51.** | 3 | **52.** | 3 | **53.** | 3 |
| **54.** | 3 | **55.** | 2 | **56.** | 3 |
| **57.** | 2 | **58.** | 2 | **59.** | 3 |

**60.** **பொருத்தமான வாக்கியங்கள்**

### CHANNEL-1

**05.08.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### CHANNEL - 2

**05.08.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# மீன்பிடிக்க சென்றோர் குளவி கொட்டி பாதிப்பு!

மட்டக்களப்பு, ஓக. 05

வாகனேரி பெட்டைக் குளத்தில் மீன் பிடிக்கச் சென்றவர்கள் சிலர் குளவிகொட்டுக்கு இலக்காகினர். இதில் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் உட்பட 6 பேர்வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் பிரதேசத்தில் உள்ள குளத்தில் மீன் பிடித்து தங்களது வாழ்வாதாரத்தை நடத்துபவர்கள். இவர்கள் நேற்று முன்தினம் காலை மீன்பிடிப்பதற்காக சென்ற போதே இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது. குளவி கொட்டிலிருந்து தப்புவதற்காக அவர்கள் குளத் தில் குதித்தனர்.எனினும், குளவி கொட்டால் 3 சிறுவர்கள் உட்பட 6 பேர் பாதிக்கப்பட்டனர். (ஐ)




# சாய்ந்தமருது ஐ. ஓ. சியில் விவசாயிகளுக்கு எரிபொருள்

மட்டக்களப்பு, ஓக. 05

சாய்ந்தமருது ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் விவசாய நடவடிக்கைகளுக்கான எரிபொருள் விநியோகம் இடம்பெற்றது.

அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக்கின் வழிகாட்டலுடன் வாகனங்களுக்கான கியூ. ஆர். குறியீடு மூலம் எரிபொருள் விநியோகம் இடம்பெற்றது.

இதேவேளை வாகனங்களின் இறுதி இலக்கங்களுக்கு அமைய கடந்த தினங்களாக எரிபொருளை பெற்றுக் கொள்ளாத பொதுமக்களுக்கும் நேற்று எரிபொருள் வழங்கப்பட்டன. இதன்போது மோட்டார் சைக்கிள்களுக்கு 4 லீற்றரும் முச்சக்கர வண்டிகளுக்கு 5 லீற்றரும் சொகுசு கார் வாகனங்களுக்கு 20 லீற்றரும் எரிபொருள் வழங்கப்பட்டது.

அத்துடன் கர்ப்பவதிகள், மத தலைவர்கள், பொலிஸார், சுகாதார வைத்திய அதிகாரிகள், பொது சுகாதார பரி சோதகர்கள், நோயாளர்கள், அவசர சேவையாளர்கள், ஊடகவியலாளர்கள், சுகாதாரத்துறையினர் உட்பட முன்களப் பணியாளர்களுக்கு சாய்ந்தமருது ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தின் நிர்வாகத்தின் விசேட நடைமுறைகளின் பிரகாரம் இடையிடையே முன்னுரிமை வழங்கப்பட்டு எரிபொருள் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

# சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு; கூட்டமைப்பு இரட்டைகாய் பறித்தது!

*சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட்*

மட்டக்களப்பு, ஓக. 04

**“சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்து தமிழ் தேசிய கூட்டமைப்புஇரட்டைக் காய்களை பறித்துள்ளது. ஒன்று மக்களின் நெருக்கடியை போக்கஉதவுவது, இரண்டாவது தமிழர்களின் பிரச்னையை தீர்க்க தருணம் பார்ப்பது”,என்று சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.**

அத்துடன், சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புஆதரவு வழங்க முன்வந்துள்ளமை, காலத்துக்கேற்ற முடிவு, இது மூத்த தமிழ்தலைவர் சம்பந்தன் ஐயாவின் அரசியல்தீர்க்க தரிசனத்தின் அடையாளமாக உள்ளது.

சம்பந்தன் ஐயாவின் இந்த முடிவு தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை அடைந்து கொள்ளும் வாசலைத் திறக்க வைத்துள்ளது. இதனை நானும்வரவேற்கிறேன்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு சர்வகட்சி அரசாங்கம்அவசியம் அமைக்கப்பட வேண்டும்.



இந்தத் தேவையிலிருந்து பொறுப்புள்ள அரசியல் கட்சிகள் விலகியிருக்க முடியாது.

இந்தத் தருணத்தை நன்குணர்ந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு இரட்டைக் காய்களை பறித்துள்ளது. ஒன்று மக்களின் நெருக்கடியை போக்க உதவுவது, இரண்டாவது தமிழர்களின் பிரச்னையை தீர்க்க தருணம் பார்ப்பது.

எனவே, ஒருவகையில் இதுவும், பேரம்பேசும் சக்தியின் ஒரு வடிவமாகவேபார்க்கப்பட வேண்டும். எனவே, இன்றைய நிலையில் அரசாங்கத்துக்கு எழுந்துள்ளதேவையை அறிந்து, முஸ்லிம் தலைமைகளும் இவ்வாறான அரசியல் வியூகங்களை வகுக்க வேண்டும். இழந்து போயுள்ள பேரம் பேசும் பலத்தை இலகுவாக பயன்படுத்த தற்போதுகிடைத் துள்ள இந்தச் சந்தர்ப்பத்தை முஸ்லிம் தலைமைகள் தவறவிடக் கூடாது” என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# நடமாடும் சேவை மூலம் 4ஆவது தடுப்பூசி ஏற்றல்!

மட்டக்களப்பு, ஓக. 05

அரச கரியாலயங்களில் கடமையாற்றுவோருக்கு இன்று வெள்ளிக்கிழமை முதல் நடமாடும் சேவை மூலம் நான்காவது கோவிட் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது என்று மட்டக்களப்பு பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் ஈ.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார். மேலும், மட்டக்களப்பில் நான்காவது கோவிட் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது நாடு பூராகவும் கோவிட் தொற்று பரவுகிறது.

மட்டக்களப்பு சுகாதார மருத்துவு அதிகார பிரிவிலுள்ள சுவிஸ் கிராமத்தில் 67 வயதுடைய ஒருவருக்கு கோவிட் தொற்று கண்டறியப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த நிலையில் 4ஆவது கோவிட் தடுப்பூசி கடந்த முதலாம் திகதி மட்டக்களப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை ஆரம்பித்துள்ளது.

வெள்ளிக்கிழமை முதல் கோவிட் தடுப்பூசி ஏற்றும் நடமாடும் சேவை மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் காரியாலயம், மாவட்ட செயலகம்,மாநகர சபை மற்றும் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் காரியாலயங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

மேலும் மூன்றாவது தடுப்பூசி ஏற்றாதவர்கள் மற்றும் முதலாவது தடுப்பூசி ஏற்றுபவர்கள், நோயாளர்கள் போன்றோருக்கு இந்த தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இடம் பெறவுள்ளது.

இதேவேளை பொதுமக்கள் பொது இடங்களில் முகக்கவசங்களை அணியுமாறும், தடுப்பூசி ஏற்றாதவர்கள் தடுப்பூசியை சுகாதார பிரதேச காரியாலயத்தில் சென்று ஏற்றிக் கொள்ள முடியும் - என்றும் கூறினார். (ஐ)

# விறகு எடுக்கச் சென்றவர் காட்டு யானை தாக்கி பலி!

மட்டக்களப்பு, ஓக. 05

விறகு எடுப்பதற்காக காட்டுக்கு சென்ற மூவரில் ஒருவர் காட்டு யானையின் தாக்குதலில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் போரதீவு பற்று - திக்கோடை தளவாய் காட்டுப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. இதில், அருள் நேசபுரம் - கடுக்காமுனை கிராமத்தை சேர்ந்த இராசசிங்கம் மோசிகவாகனம் (வயது 57) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

கடுக்காமுனை பகுதியில் இருந்து விறகு எடுப்பதற்காக 3 பேர் திக்கோடை தளவாய் காட்டுப்பகுதிக்கு சென்றனர். அச்சமயம், அவர்களை காட்டு யானை துரத்தியுள்ளது.

மூவரும் ஓடிய நிலையில், உயிரிழந்தவர் யானையிடம் சிக்கியதில் அவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேசமயம், போரதீவுப் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் அண்மைநாட்களாக

காட்டுயானைகளின் தாக்குதலில் தொடர்ச் சியாக மரணங்கள் இடம்பெறுகின் றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்து மூன்றரை வயது சிறுமி பலி!

வாழைச்சேனை, ஓக. 05

வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் அதன் அருகே விளையாடிக் கொண்டிருந்தமூன்றரை வயது சிறுமி நசியுண்டு பலியானார்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு - வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புணானை - பொத்தானை பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

மீள்குடியேற்ற கிராமத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உசனார் பாத்திமாறீமா என்ற மூன்றரை வயது சிறுமியே உயிரிழந்தார்.

உயிரிழந்த சிறுமியின் வீட்டுக்கு அருகில் உள்ள வீடு உடைக்கப்பட்டு ஒருபக்கச் சுவர் மாத்திரம் காணப்பட்ட நிலையில், அந்தப் பகுதியில் மூன்றுசிறுமிகள் விளையாடிக் கொண்டிருந்தனர்.

அச்சமயம் பலமான காற்று வீசியபோது சுவர் சரிந்து விழுந்துள்ளது. இதில்,சிக்கி ஒரு சிறுமி உயிரிழந்தார். மற்ற இரு சிறுமிகளும் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினர்.

உயிரிழந்த சிறுமியின் சடலம் வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ரஷ்யாவுடனான போரை நிறுத்த சீனாவை நாடுகிறது உக்ரைன்!



பீஜிங், ஓக. 05

ரஷ்யாவுடனான போரை முடிவுக்குக் கொண்டு வர சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்குடன் நேரடியாக பேசுவதற்கு உக்ரைன் ஒரு வாய்ப்பை எதிர்பார்க்கிறது என்று உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்தார் என சௌத் சீனா மோர்னிங் போஸ்ட் நேற்று வியாழக்கிழமை தெரிவித்துள்ளது.

போரை முழுவுக்குக் கொண்டுவர ரஷ்யா மீது சீனா அதன் அதீத அரசியல் மற்றும் பொருளாதார செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும் என சவுத் சைனா மோர்னிங் போஸ்ட்டுக்கு வழங்கிய நேர்காணலில் ஜெலென்ஸ்கி கோரிக்கை விடுத்துள்ளார்.

சீனா மிகவும் சக்தி வாய்ந்த அரசு. இது உலகில் ஒரு சக்தி வாய்ந்த பொருளாதார நாடு.

எனவே ரஷ்யா மீது அரசியல், பொருளாதார ரீதியாக சீனாவால் செல்வாக்கு செலுத்த முடியும்.

அத்துடன், ஐ.நா. பாதுகாப்பு சபையில் சீனா நிரந்தர உறுப்பினராக உள்ளதால் போரை நிறுத்த ரஷ்யாவுக்கு அதிக அழுத்தங்களை பிரயோகிக்க முடியும் என உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்தார் என்றும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

# போர் நடவடிக்கைகளுக்கு தாய்வான் தயாராகிறது!

### அறிவித்தது பாதுகாப்பு அமைச்சு

தைபே, ஓக.05

**யுத்தத்தை நாடாத போதிலும் போர் நடவடிக்கைகளுக்கு தயாராவதாக தாய்வான் அறிவித்துள்ளது.**



நேற்று வியாழக்கிழமை தாய்வான் கரையோரத்தில் சீனா முன்னொரு போதும் இல்லாதவகையில், நான்கு நாள் போர் ஒத்திகையை ஆரம்பித்துள்ளது. இந்நிலையிலேயே தாய்வான் இதனை அறிவித்துள்ளது.

நான்சி பெலோசியின் தாய்வான் பயணத்தைத் தொடர்ந்தே சீனா இராணுவ ஒத்திகையை ஆரம்பித்துள்ளது. இதனை, "முக்கியமான இராணுவ ஒத்திகை ஆரம்பிக்கப்பட்டுள்ளது", என சீனாவின் அரச ஊடகமான சி. சி. ரீ. வி. அறிவித்துள்ளது.

இந்த ஒத்திகையில் சீனா ஏவுகணைகளை பயன்படுத்தலாம் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த உண்மையான மோதல் ஒத்திகையில் தாய்வான் தீவை சுற்றியுள்ள ஆறு இடங்கள் தெரிவு செய்யப்பட்டன. இங்கு ஒத்திகைகள் இடம்பெறுகின்றன. ஒத்திகை காலத்தில் இந்தப் பகுதிக்குள் கடல் மற்றும் வான் பரப்புக்குள் அனைத்து கப்பல்களும் விமானங்களும் நுழைய முடியாது என சீன ஊடகம் தெரிவித்துள்ளது.

ஒத்திகை நடக்கும் பகுதிகள் தாய்வானின் முக்கிய துறைமுகங்களுக்கு அண்மையாக உள்ளன.

இதனை, சீனா முற்றுகை ஒன்றில் ஈடுபட்டுள்ளது என்று தாய்வானின் பாதுகாப்பு அமைச்சு குற்றஞ்சாட்டியுள்ளது. தாய்வானுக்கு வரவுள்ள கப்பல்களையும் விமானங்களையும் மாற்றுப்பாதைகளை பயன்படுத்துமாறு அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

சீனா தனது ஒத்திகையை ஆரம்பித்து பத்து நிமிடங்களின் பின்னர் அறிக்கையொன்றை வெளியிட்ட தாய்வானின் பாதுகாப்பு அமைச்சு, "சீனா பகுத்தறிவற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது சீனாவுக்கு தற்போதைய நிலையை மாற்றும் பிராந்திய அமைதி மற்றும் ஸ்திரதன்மையை குலைக்கும் நோக்கமுள்ளது என குற்றம்சாட்டியுள்ளது. யுத்தத்தை நாடாமல் யுத்தத்துக்கு தயாராகும் நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதாகவும் அந்த நாடு தெரிவித்துள்ளது. (ஐ)

## பதற்றத்தை தணிக்க ஏதுவாக சீனா செயல்பட வேண்டும்!

### கனடா வலியுறுத்து



ஒட்டாவா, ஓக. 05

அமெரிக்க பாராளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசியின் தாய்வான் பயணத்தைத் தொடர்ந்து சீனா - தாய்வான் இடையே ஏற்பட்டுள்ள பதற்றங்கள் குறித்து கவலை கொண்டுள்ளதாக கனடா தெரிவித்துள்ளது.

பதற்ற நிலையை தணிக்க ஏதுவாக செயல்படுமாறு கனடிய வெளியுறவு அமைச்சர் மெலனி ஜோலி சீனாவுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

எந்தவொரு நாட்டின் உயர் அரசியல்வாதிகளும் உலகெங் கும் பயணம் செய்கிறார்கள். இந்நிலையில், நான்சி பெலோ சியின் தாய்வான் பயணத்தை பதற்றங்களைத் தூண்டுவதற்கான ஒரு சாக்குப்போக்காக பயன்படுத்த முடியாது என ஜேர்மனி வெளியுறவு அமைச்சருடன் இணைந்து நேற்று மொன்றியலில் செய்தியாளர்களிடம் பேசிய மெலனி ஜோலி தெரிவித்தார்.

இந்நிலையில் பதற்றங்களைத் தணிக்குமாறு நாங்கள் சீனாவுக்கு அழைப்பு விடுக்கிறோம். அதிகரிக்கும் பதற்றங்களால் பிராந்திய ஸ்திரமின்மைக்கு ஆபத்து ஏற்படலாம் என்று நாங்கள் நினைக்கிறோம் எனவும் கனடிய வெளியுறவு அமைச்சர் மெலனி ஜோலி தெரிவித்தார். (ஐ)

## மெக்சிக்கோவில் சுரங்க விபத்து! 11 தொழிலாளர்கள் சிக்கியுள்ளனர்!



மெக்சிக்கோசிற்றி, ஓக. 05

மெக்சிகோவின் கோஹூயிலா மாநிலத்தில் நிலக்கரிச் சுரங்கத்தின் இடிந்து விழுந்ததில் சுரங்கத்துக்குள் 11 தொழிலாளர்கள் சிக்கியுள்ளனர் என்று அந்த மாநிலத்தி செயலாளர் பெர்னாண்டோ டொனாடோ டி லாஸ் ஃபுயெண்டஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் முதல் சுரங்கத்துக்குள் சிக்கியுள்ள தொழிலாளர்கள் குழுவை மீட்கும் முயற்சி தீவிரமாக இடம்பெற்று வருவதாக மெக்சிகோ தேசிய தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி யில் அவர் கூறினார்.

இந்த நிலக்கரிச் சுரங்கம் சபினாஸ் நகராட்சியில் அமைந்துள்ளது. சுரங்கத்துக்குள் தொழிலாளர்கள் சிக்கிய தகவல் அறிந்ததும், உள்ளூர் ஊடகவியலாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் குடும்பத்தினர் சுரங்க வளாகத்திற்கு வெளியே திரண்டனர்.

இந்த நிலக்கரிச் சுரங்கம் கடந்த ஜனவரியில் செயற்படத் தொடங்கியது. இச்சுரங்கத்தின் செயல்பாடுகள் குறித்து இதுவரை எந்தவொரு புகாரும் வரவில்லை என்று மெக்சிகோ தொழிலாளர் அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுரங்கத்துக்குள் சிக்கியுள்ள தொழிலாளர்கள் பாதுகாப்பாக இருப்பார்கள் என நம்புவதாக மெக்சிகோ ஜனாதிபதி அண்ட்ரெஸ் மனுவல் லோபஸ் ஒப்ராடோர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சுமார் 92 மீட்புப் படையணிகளைச் சேர்ந்த வீரர்கள் சம்பவ இடத்திற்கு வந்துள்ளனர், அத்துடன் நிபுணர்கள் மற்றும் மோப்ப நாய்கள் மீட்புப் பணிகளுக்காக களமிறங்கியுள்ளதாக வும் ஜனாதிபதி மேலும் தெரிவித்திருந்தார்.

## சுவீடன், பின்லாந்து நேட்டோவில் இணைய அமெரிக்கா ஒப்புதல்!



வாஷிங்டன், ஓக. 05

நேட்டோவில் பின்லாந்து மற்றும் சுவீடன் நாடுகள் இணைவதற்கு அமெரிக்க செனட் சபை ஒப்புதல் அளித்துள்ளது. வாக்கெடுப்பில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உக்ரைன்மீதான ரஷ்யாவின் போரைத் தொடர்ந்து பின்லாந்தும், சுவீடனும் நேட்டோ அமைப்பில் இணைய முடிவு செய்தன. ஆனால், அவை நேட்டோ அமைப்பில் இணைய வேண்டும் என்றால், வட அத்திலாந்திக் ஒப்பந்த அமைப்பின்கீழ் உறுப்பு நாடுகளாக இருக்கும் 30 நாடுகளின் பாராளுமன்றங்கள், அவற்றுக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும்.

அப்போதுதான் நேட்டோ அமைப்பின் பாதுகாப்பு அந்நாடுகளுக்குக் கிடைக்கும். அதாவது நேட்டோ அமைப்பிலுள்ள ஒரு நாடு தாக்கப்பட்டால், "ஓர் உறுப்பு நாட்டின் மீதான தாக்குதல், அனைத்து உறுப்பு நாடுகளின் மீதான தாக்குதலுக்கு சமம்" என்ற கொள்கையின்படி, நேட்டோ அமைப்பில் உறுப்பினராக இருக்கும் நாடுகளுக்கு இந்த பாதுகாப்பு அளிக்கப்படும்.

இந்நிலையில், உக்ரைன்மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பை எதிர்கொள்ளும் வகையில் அத்திலாந்திக் கடல் கடந்த கூட்டணியின் விரிவாக்கத்தை வலுவாக ஆதரித்து, நேட்டோவில் சுவீடன் மற்றும் பின்லாந்து நாடுகள் இணைவதற்கு அமெரிக்க செனட் ஒப்புதல் அளித்துள்ளது.

பின்லாந்து, சுவீடன் ஆகிய நாடுகள் நேட்டோவில் இணைவதன் மூலம் நமது பாதுகாப்பு ஒத்துழைப்பு மேலும் வலுவடையும். இது முழு அத்திலாந்திக் கூட்டணிக்கும் பயனளிக்கும் என அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் நெட் பிரைஸ் தெரிவித்துள்ளார். (ஐ)

ஈழநாடு



## பொதுநலவாய விளையாட்டு

# 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் வெண்கலம் வென்றார் யுப்புன்!




பர்மிங்ஹாம், ஓக. 05

இங்கிலாந்தின் பர்மிங்ஹாமில் நடைபெற்றுவரும் 22ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கை வீரர் யுப்புன் அபயகோன் வெண்கலப் பதக்கம் வென்று வரலாறு படைத்தார்.

92 வருட பொதுநலவாய விளையாட்டு விழா வரலாற்றில் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கைக்கு முதலாவது பதக்கத்தை வென்று கொடுத்த வரலாற்று சாதனையை யுப்புன் அபயகோன் படைத்துள்ளார். அத்துடன், 24 வருடங்களின் பின்னர் இலங்கைக்கு மெய்வல்லுநர் போட்டியில் பதக்கம் கிடைத்தி ருப்பது இதுவே முதல் தடவையாகும்.

அலெக்சாண்டர் விளையாட்டரங்கில் நேற்று (இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை 2.00 மணி) நடைபெற்ற இறுதிப் போட்டியை 10.14 செக்கன்களில் நிறைவு செய்த யுப்புன் அபயகோன் 3ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

இறுதிப் போட்டியில் பங்குபற்ற தகுதி பெற்ற 8 மெய் வல்லுநர்களின் நேரப் பெறுதிகளின் பிரகாரம் யுப்புன் அபயகோன் 8ஆவது இடத்தில் இருந்த வாறே இறுதிப் போட்டியை எதிர்கொண்டார்.

ஆரம்பம் முதல் கடைசி வரை முழு வீச்சில் ஓடிய யுப்புன் அபயகோன் 3ஆம் இடத்தை உறுதி செய்தார். இந்தப் போட்டியில் கென்ய வீரர் பேர்டினண்ட் ஓமன்யாலா (10.02 செக்) தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார். தென்னாபிரிக்க வீரர் அக்கானி சிம்பைன் (10.13 செக்.) வெள்ளிப் பதக்கத்தை வென்றெடுத்தார். (ஐ)




## தென்னாபிரிக்காவுடனா தொடர் இங்கிலாந்து அணி அறிவிப்பு

லண்டன், ஓக. 05

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான இங்கிலாந்து டெஸ்ட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்கா அணி இங்கிலாந்து சுற்றுப்பயணம் செய்து 3 ஒருநாள் மற்றும் 3 இருபது -20 தொடர்களில் விளையாடியது. ஒருநாள் தொடர் 1-1 என்ற கணக்கில் சமமானது. இருபது -20 தொடரில் தென்னாபிரிக்கா அணி 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையேயான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் வரும் 17ஆம் திகதி தொடங்குகிறது. இந்நிலையில் முதல் 2 டெஸ்ட் போட்டிகளுக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அணியில் வேகப்பந்து வீச்சாளர் ஒல்லி ரொபின்சன் இடம் பிடித்துள்ளார். முதுகில் ஏற்பட்ட காயம் காரணமாக இந்த ஆண்டின் தொடக்கத்தில் மேற்கிந்திய தீவுகள் சுற்றுப்பயணத்திலிருந்து ரொபின்சன் விளையாடவில்லை. இந்திய டெஸ்ட் தொடரின் போது கோவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட பென் போக்ஸ் மீண்டும் அணியில் இணைந்துள்ளார்.

அணி விவரம்: பென் ஸ்ரோக்ஸ் (அணித் தலைவர்), ஜேம்ஸ் அண்டர்சன், ஜொன்னி பெயர்ஸ்ரோ, ஸ்ருவர்ட் பிரோட், ஹரி புரூக், ஷாக் கிராவ்லி, பென் போக்ஸ், ஜாக் லீச், அலெக்ஸ் லீஸ், கிராக் ஓவர்ரன், மத்தியூ பொற்ஸ், ஒல்லி போப், ஒல்லி ரொபின்சன், ஜோ ரூட்.




## ஆஸி., தென்னாபிரிக்காவுடன் மோதுகின்றது இந்திய அணி!

மும்பை, ஓக. 05

அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான கிரிக்கெட் தொடருக்கான அட்டவணையை இந்திய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிகள் வரும் செப்ரெம்பர் மாதம் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் செய்யவுள்ளன. இதற்கான அட்டவணையை இந்திய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இருபது - 20 உலகக்கிண்ணம் நடக்கவுள்ளதையடுத்து, இந்த இரு தொடர்களிலும் இருபது - 20 போட்டிகளுக்கு முக்கியவத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இந்தியா மூன்று போட்டிகள் கொண்ட இருபது - 20 போட்டிகளில் விளையாடுகிறது. இதேபோல் தென்னாபிரிக்க அணிக்கு எதிராக தலா மூன்று இருபது - 20 போட்டிகளும், ஒருநாள் போட்டிகளிலும் விளையாடுகிறது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் இருபது - 20 போட்டி மொஹாலியில் நடைபெறவுள்ளது. இரண்டாவது மற்றும் மூன்றாவது போட்டிகள் முறையே நாக்பூர் மற்றும் ஹைதராபாத்தில் நடைபெறவுள்ளது. தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடர் திருவனந்தபுரத்தில் தொடங்குகிறது. இரண்டாவது இருபது -20 போட்டி, ஒக்ரோபர் 2ம் திகதி கவுகாத்தியிலும், கடைசி இருபது - 20 போட்டி இந்தூரில் நடைபெறவுள்ளது.

முதல் ஒருநாள் போட்டி ஒக்ரோபர் 6ஆம் திகதி லக்னோவிலும், இரண்டாவது மற்றும் மூன்றாவது ஒருநாள் போட்டிகள் முறையே ராஞ்சி மற்றும் டில்லியில் நடைபெறவுள்ளன.

## 400 மீற்றர் ஓட்ட பந்தயம் காலிங்க அரையிறுதியில்

பர்மிங்ஹாம், ஓக. 05

இங்கிலாந்தின் பர்மிங்ஹாமில் நடைபெற்றுவரும் 22ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவில் இலங்கையின் காலிங்க குமாரகே ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியின் அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

போட்டியின் 6ஆம் நாளான நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்களுக்கான 400 மீற்றர் முதலாவது திறன்காண் போட்டியில் பங்குபற்றிய காலிங்க குமாரகே நூலிழையில் 3ஆம் இடத்தைத் தவறவிட்டார்.

இதன் காரணமாக அரையிறுதிக்கு நேரடியாக தகுதிபெறும் வாய்ப்பை தவறவிட்டார். எனினும், அதி சிறந்த நேரப் பெறுதி அடிப்படையில் அவர் அரையிறுதிக்கு முன்னேறினார்.

நேற்று நடைபெற்ற 7 திறன்காண் போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பெற்ற 21 வீரர்கள் அரை இறுதிக்கு நேரடியாகத் தகுதிபெற்றனர். மற்றைய மூவர் அதி சிறந்த நேர அடிப்படையில் அரையிறுதிக்கு முன்னேறினார். இந்த மூவரில் அதிசிறந்த நேரப் பெறுதிப் பெறுதியைக் கொண்டிருந்த காலிங்க குமாரகே, ஒட்டுமொத்த நிலையில் 17ஆம் இடத்தை அடைந்து பலத்த பாராட்டைப் பெற்றார்.

போட்டியின் ஆரம்பத்திலிருந்து 300 மீற்றர் வரை முன்னிலையில் இருந்த காலிங்க குமாரகேவை கடைசிக் கட்டத்தில் நமீபிய வீரர் ஐவன் டெனி 0.02 செக்கன்கள் வித்தியாசத்தில் 4ஆம் இடத்துக்கு பின்தள்ளினார். காலிங்க குமாரகே போட்டி தூரத்தை 46.53 செக்கன்களில் நிறைவு செய்தார். (ஐ)






## ஸ்மிருதி மந்தனா புதிய சாதனை!

பர்மிங்ஹாம், ஓக. 05

இருபது -20 போட்டிகளில் தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கி 2,000 ஓட்டங்களைக் கடந்த வீராங்கனை என்ற சாதனையை இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் ஸ்மிருதி மந்தனா படைத்துள்ளார்.

இந்திய ஆடவர் அணியின் தலைவர் ரோஹித் சர்மா இருபது -20 போட்டிகளில் தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கி 2,000 ஓட்டங்களைக் கடந்த முதல் வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார். அவரைத் தொடர்ந்து மகளிர் கிரிக்கெட் அணியின் தொடக்க வீராங்கனை இருபது - 20 போட்டிகளில் 2000 ஓட்டங்களைக் கடந்த இரண்டாவது நபர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

அவர் இந்த சாதனையை இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் பொதுநலவாய போட்டியில் படைத்துள்ளார். பார்படோஸ் அணியை எதிர்த்து இந்திய அணி களமிறங்கியது. இந்தப் போட்டியில் 7 பந்துகளை எதிர்கொண்ட ஸ்மிருதி மந்தனா 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். எனினும், அவர் புதிய சாதனையைப் படைத்தார்.

தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கி 79 இனிங்ஸ்களில் அவர் 2,004 ஓட்டங்கள் குவித்துள்ளார். அவரின் சராசரி 27.45 ஆகும். அதில் 14 அரைச்சதங்கள் அடங்கும். அவர் அதிகபட்சமாக 86 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர் ரோஹித் சர்மா 96 இனிங்ஸ்களில் 2,973 ஓட்டங்கள் குவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு



# சீரற்ற காலநிலையால் 12 ஆயிரம் பேர் பாதிப்பு!

## நால்வர் காணாமல் போயினர்

கொழும்பு, ஓக. 05

**நாட்டில் கடந்த இரு தினங்களாக நிலவி வரும் சீரற்ற காலநிலை காரண மாக பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 12 ஆயிரமாக அதிகரித்துள்ளது என்று மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.**

**அத்துடன், நுவரெலியா மாவட்டத்தில் அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவிலும், கண்டி மாவட்டத்தில் பஸ்பாகேகோரள பிரதேச செயலகப்பிரிவிலும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட நால்வர் நேற்றுமுன்தினம் மாலை வரை கண்டு பிடிக்கப்படவில்லை.**



இரத்தினபுரி, கண்டி, நுவரெலியா, மாத்தறை, கேகாலை, மாத்தளை, காலி, அம்பாந்தோட்டை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களிலேயே வெள்ளம் மற்றும் கடும் மழை காரணமாக அதிகளவான பாதிப்புக்கள் பதிவாகியுள்ளன.

இந்த மாவட்டங்களில் ஒரு வீடு முழுமையாக சேதமடைந்துள்ளதோடு, 982 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. இவற்றினால் பாதிக்கப்பட்ட 480 குடும்பங்களைச் சேர்ந்த 2313 பேர் 15 பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடும் மழை மற்றும் வெள்ளம் காரண மாக இன்று வியாழக்கிழமை மத்திய மாகாணத்தின் நுவரெலியா, கொத்மலை மற்றும் ஹற்றன் கல்வி வலயங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் அறிவித்துள்ளார்.

**இரத்தினபுரி**

இரத்தினபுரி மாவட்டத்தில் 1788 குடும்பங்களைச் சேர்ந்த 6896 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 537 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. 71 குடும்பங்களைச் சேர்ந்த 386 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**கண்டி**

கண்டி மாவட்டத்தில் 827 குடும்பங்களை சேர்ந்த 3809 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இம்மாவட்டத்தில் 19 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. 323 குடும்பங்களைச் சேர்ந்த 1595 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**நுவரெலியா**

நுவரெலியா மாவட்டத்தில் 443 குடும்பங்களைச் சேர்ந்த 1649 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இம்மாவட்டத்தில் ஒரு வீடு முழுமையாகவும் 313 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. இங்கு 86 குடும்பங்களைச் சேர்ந்த 332 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள னர்.

**மாத்தறை**

மாத்தறை மாவட்டத்தில் 50 குடும்பங்களைச் சேர்ந்த 192 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இம்மாவட்டத்தில் 50 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

**கேகாலை**

கேகாலை மாவட்டத்தில் 49 குடும்பங்களைச் சேர்ந்த 180 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இம் மாவட்டத்தில் 40 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

**மாத்தளை**

மாத்தளை மாவட்டத்தில் ரத்தோட்டை பிரதேச செயலகப்பிரிவில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 34 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இம் மாவட்டத்தில் 9 வீடுகள் கடும் மழை காரணமாக பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

**அம்பாந்தோட்டை**

அம்பாந்தோட்டையில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 23 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இம் மாவட்டத்தில் 5 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

**கம்பஹா**

கம்பஹா மாவட்டத்தில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 23 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இங்கு 6 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

**காலி, யாழ்ப்பாணம்**

காலி மாவட்டத்தில் இரு குடும்பங்களைச் சேர்ந்த 8 பேரும் , யாழ் மாவட்டத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவரும் பாதிக்கப்பட்டுள்ளனர் - என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மத்திய மாகாணத்தில் பாடசாலைகளுக்கு விடுமுறை

கொழும்பு, ஓக. 05

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக மத்திய மாகாணத்தின் 3 கல்வி வலையங்களில் பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

கொத்மலை, நுவரெலியா மற்றும் ஹற்றன் கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளுக்கு நேற்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

எனினும், ஹிங்குராங்கெத்தை மற்றும் வலப்பனை ஆகிய வலயங்களில் உள்ள பாடசாலைகளின் கற்றல் செயல்பாடுகள் வழமைபோல் இடம்பெறும் என மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே தெரிவித்தார்.

நிலவும் சீரற்ற வானிலை காரணமாக, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ஐ)

## நானுஓயாவில் மண்சரிவு போக்குவரத்து தடைப்பட்டது



நுவரெலியா, ஓக. 05

நுவரெலியா - தலவாக்கலை பிரதான வீதியின் நானுஓயா பகுதியில் நேற்றுக் காலை மண் சரிவு ஏற்பட்டதால் இந்த வீதியூடான போக்குவரத்து சுமார் நான்கு மணித்தியாலங்கள் தடைப்பட்டது.

இந்த மண்சரிவு காரணமாக நுவரெலியா, தலவாக்கலை மற்றும் மெராயா வழியூடாக டயகமைக்கான போக்குவரத்து முற்றாகப் பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து நீண்ட நேர சிரமத்தின் பின் நானுஓயா பொலிஸார், நுவரெலியா வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து மண்மேட்டை அகற்றி இந்த வீதியின் போக்குவரத்தை வழமைக்கு கொண்டு வந்தனர்.

எவ்வாறாயினும், குறித்த வீதியின் ஒருமருங்கில் மாத்திரம் போக்குவரத்து இடம் பெறுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்தப் பகுதியில் பல இடங்களில் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளதால் அந்தப் பாதையில் பயணிக்கும் வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் மிகுந்த அவதானத்துடன் பயணிக்குமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளனர். (ஐ)

# கொள்கை உரையில் கூறியவை செயல்வடிவம் பெற வேண்டும்!

## இராதாகிருஷ்ணன் எம். பி.

கொழும்பு, ஓக. 05

அரசாங்கத்தின் கொள்கை விளக்கவுரையில் கூறப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படுமாக இருந்தால் அதுவே நாட்டின வெற்றியாக அமையும் என்று, நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பாக விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், நீண்ட ஓர் இடைவேளைக்கு பின்பு இலங்கை ஜனாதிபதி ஒருவரால் பாராளுமன்றத்தில் ஆற்றப்பட்ட சிறந்த உரையாகவே இதனை நான் பார்க்கின்றேன். ஏனெனில், கடந்த காலங்களில் ஜனாதிபதியாக இருந்தவர்கள் தாங்கள் பெரும்பான்மை மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி எனவும் சிறுபான்மை மக்கள் வாக்களிக்கவில்லை என்றும் பாராளுமன்றத்தில் உரையாற்றியதை நாங்கள் பார்த்திருக்கின்றோம்.




ஆனால், இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் இந்த நாட்டின் அனைத்து மக்களுக்கும் ஜனாதிபதி என்பதை தெரிவித்திருக்கின்றார். அதுவே, உண்மை பாராளுமன்றத்தில் அவருக்கு சிறுபான்மை சமூகத்தை சேர்ந்தவர்கள் வாக்களித்தார்களா? இல்லையா? என்பது வேறு விடயம். ஏனெனில், அது ஓர் இரகசிய வாக்கெடுப்பு. ஆனால், அந்த வாக்களிப்பு நிறைவடைந்து வெற்றி பெற்ற பின்பு அவர் இந்த நாட்டின் அனைத்து மக்களுக்கும் ஜனாதிபதியாகவே இருப்பார். அதனை கடந்த கால ஜனாதிபதி உணராமையும் அவருடைய ஆட்சி கவிழ்ந்தமைக்கு ஒரு முக்கிய காரணமாகும்.

இன்றைய ஜனாதிபதி தனது பாராளுமன்ற உரையில் பல விடயங்களையும் குறிப்பிட்டிருக்கின்றார். குறிப்பாக வட, கிழக்கு மக்களின் பிரச்னைகளுக்கான தீர்வு பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் இளைஞர்களின் மன உணர்வுகள், விவசாயிகளின் பிரச்னைகள் என அனைத்து துறைகளையும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

எனவே, இந்த அனைத்து விடயங்களையும் செய்து முடிக்க முடியுமாக இருந்தால் இலங்கை அரசியலில் சிறந்த ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க இருப்பார். இவற்றை செய்து முடிக்க முடியாவிட்டால் இவரும் ஏனையோரைப் போலவே சாதாரண ஒரு ஜனாதிபதியாகவே பேசப்படுவார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்து தரப்பினருக்கும் தீர்வுகளை பெற்றுக் கொடுக்கின்ற பொழுது நிச்சயமாக மலையக மக்களின் வாழ்வாதாரம் வேலைவாய்ப்பு உட்பட ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தி அவற்றுக்கும் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும்.

இதேநேரத்தில் இந்த நாட்டில் இலஞ்சத்தை ஒழிப்பதற்கும் இளைஞர்களின் மன எழுச்சிக்கும் அவர்களின் அகிம்சை போராட்டத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.இவை அனைத்தையும் செய்து முடிக்க முடியுமாக இருந்தால் நிச்சயமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களின் மனங்களில் என்றும் நிலைத்திருப்பார் - என்றுள்ளது. (கே)

## சம்பிக்கவுக்கு...

கையாண்டார் என்பதைக் கருத்தில் கொண்டு, நெருக்கடியான இந்த தருணத்தில் அவருக்கு மீண்டும் முக்கியமான அமைச்சுப் பதவியை வழங்குவதே பொருத்தமானது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக அந்த காலப்பகுதியில் அந்நிய செலாவணி பிரச்னைக்கு தீர்வு காண இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் விசேட அதிகாரிகள் குழுவொன்றை சம்பிக்க ரணவக்க ஈடுபடுத்தியிருந்தார்.

அதற்கமைய, பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் நாளாந்த வருமானமான ரூபாயில் ஒரு பகுதி அந்நியச் செலாவணியை கொள்வனவு செய்யப் பயன்படுத்தப்பட்டது. இதன் காரணமாக எரிபொருள் இறக்குமதிக்குத் தேவையான டொலர்கள் பிரச்னை நிறுவனத்திற்கு ஏற்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலைமையை ஜனாதிபதிக்கு நினைவுபடுத்தியுள்ள அரசாங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள், கடந்த இரண்டு வருடங்களாக எரிசக்தி அமைச்சர்களுடன் ஒப்பிடுகையில் காஞ்சன விஜேசேகர சிறப்பாக செயற்பட்டாலும் அவருக்கு இன்னும் போதிய அனுபவம் இல்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நெருக்கடியான தருணத்தில், அனுபவமிக்க அரசியல்வாதியாக, மக்களின் நம்பிக்கையைப் பெறக்கூடிய அரசியல்வாதியாக, சம்பிக்க ரணவக்க இந்தப் பதவிக்கு மிகவும் பொருத்தமானவர் என அவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். சம்பிக்க ரணவக்க பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து விலகி தற்போது சுயேச்சை உறுப்பினராக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கோரிக்கைகள்...

ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கிய சி.வி.விக்னேஸ்வரன் சர்வகட்சி அரசாங்கத்தில் அமைச்சு பதவியை ஏற்றுக் கொள்வாரா? என்பது தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ் மக்கள் தொடர்பான தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டதன் பின்னரே, சர்வகட்சி அரசாங்கத்தில் அமைச்சுப்பதவியை ஏற்பது குறித்து ஆராய முடியும் என அவர் தெரிவித்தார். (அ)

## அவசரகாலச்...

கள் மற்றும் பத்திரிகையாளர்களை மிரட்டுதல், கண்காணித்தல் மற்றும் தன்னிச்சையாக கைது செய்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் அரசுக்கு எதிரான போராட்டங்களை தடுக்க முயற்சிகள் இடம்பெறுவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைதிப் போராட்டக்காரர்கள் மீதான இலங்கை அரசாங்கத்தின் அடக்குமுறையானது, நாட்டின் அவசர பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணவேண்டிய அவசியத்திலிருந்து கவனத்தைத் திசை திருப்பும் தவறான மற்றும் சட்டவிரோத முயற்சியாகத் தோன்றுகிறது என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஆழமாக வேரூன்றியிருக்கும் பொருளாதாரப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு மனித உரிமைகளை மதிக்கும் அரச நிர்வாகத்துடன் இணைந்து பணியாற்றவேண்டும் என்பதில் இலங்கையின் சர்வதேச பங்காளிகள் தெளிவாக இருக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தங்கள் மீதான அச்சுறுத்தல் மற்றும் கண்காணிப்பு அதிகரித்துள்ளதாக சட்டத்தரணிகள் மற்றும் ஊடக நிறுவனங்களைச் சேர்ந்தோர் மனித உரிமைகள் கண்காணிப்பகத்திடம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் சர்வதேச தரத்திற்கு முரணான அவசரகாலச் சட்டத்தின் விதிகள் உடனடியாக இரத்து செய்யப்பட வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (அ)

## இன்று 1 மணி...

ஜனக ரத்னாயக்க தெரிவித்தார்.

எரிபொருள் பற்றாக்குறை, நீர் வளப் பற்றாக்குறை மற்றும் அனல் மின்நிலைய மின்பிறப்பாக்கி செயலிழப்பு போன்ற விளைவுகளால், போதிய மின் உற்பத்தியின்மை காரணமாக மின்சார விநியோகத்தை முகாமை செய்வதற்கு மின்சார நடவடிக்கை எடுத்து வருகிறது.

சில வாரங்களின் பின்னர் கடந்த 2ஆம் திகதி நீர் மின் உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சான விஜேசேகர குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் 40 வீத நீர் மின் உற்பத்தி செய்யப்பட்டது. கடந்த 2ஆம் திகதி இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து 57.17 வீத நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, மின் உற்பத்தி நிலையங்களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்கள், கடந்த சில காலங்களில் பெய்த மழையினால் நிரம்பியுள்ளதால் எதிர் வரும் நாட்களில் மின்வெட்டு காலத்தை குறைக்க முடியும் என பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க குறிப்பிட்டார். (அ)

## காலிமுகத்திடல்...

வேண்டும் என கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

போராட்டக்காரர்கள் சட்டத்தை கடைப்பிடிக்கவேண்டும் என்றும், பொது அமைதிக்கு இடையூறு விளைவிப்பதை தவிர்க்கவேண்டும் என்றும் கோட்டை பொலிஸாரின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பிற்கு செவிசாய்க்கத் தவறும் நபர்கள் சட்ட நடவடிக்கைக்கு ஆளாக நேரிடும் என்றும் கோட்டை பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

அதன்படி, போராட்டக்காரர்களுக்கு காவல்துறை பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (அ)

## கைது வேட்டை...

கூட்டுச் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய அரசு மக்கள் மீது தொடர்ச்சியாக அடக்குமுறையைப் பிரயோகித்துக் கொண்டிருக்கின்றது. மக்கள் எழுச்சிப் போராட்டங்களால் நாட்டில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அந்த மாற்றங்களினாலேயே இந்த அரசு ஆட்சியைக் கைப்பற்றியது. போராட்டக்காரர்களின் முதுகில் ஏறி ஆட்சியைக் கைப்பற்றியவர்கள், தற்போது அந்தப் போராட்டக்காரர்களையே வேட்டையாடத் தொடங்கியுள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் ஆற்றிய கொள்கை விளக்க உரையில், ஆரம்பத்தில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் வன்முறையற்றவையாகவும், அமைதியானவையாகவும் காணப்பட்டன என்று சான்றிதழ் வழங்கியிருந்தார். ஆனால், இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு ஆரம்பத்திலிருந்தே தலைமை தாங்கியவர்களைத் தற்போது அரசு கைதுசெய்து வருகின்றது.

கைதுசெய்யப்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் பிரபல தொழிற்சங்கவாதியாவார்.

அவரைக் கைதுசெய்ததை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இவ்வாறான கைதுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். ஏற்கனவே கைதுசெய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். போராடும் உரிமையை எவரும் தடுக்க முடியாது-என்றார். (அ)

# நீதிமன்றுக்குள் துப்பாக்கிச் சூடு!

### கல்கிஸையில் பயங்கரம்

கொழும்பு, ஓக. 05

கல்கிஸை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தவேளை உள்நுழைந்த மர்ம நபர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நேற்று பிற்பகல் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நீதிமன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் இருந்த பிரதிவாதியை குறிவைத்தே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. எனினும் அவர் மீது சூடு படவில்லை.

இதனையடுத்து சூடு நடத்தியவர் மின்னல் வேகத்தில் தப்பிச்சென்றுள்ளார்.

சினிமாப்பாணியில் அரங்கேறிய இந்த சம்பவத்தால் நீதிமன்ற வளாகத்தில் அச்ச நிலையும் உருவானது. (அ)

# ஜனாதிபதி இல்ல பியர் கிளாஸை எடுத்துச் சென்றவரும் கைது!

கொழும்பு, ஓக. 05

ஜனாதிபதியின் அதிகாரபூர்வ இல்ல முற்றுகையின்போது பியர் கிளாஸ் ஒன்றை எடுத்துச் சென்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு வயது 46 என்றும் வெல்டிங் தொழிலில் ஈடுபட்டு வருபவர் என்றும் தெரிவிக்கப் படுகின்றது. குருநாகல் பகுதியில் பொலிஸாரால்இந்த நபர்கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஜூலை 9 ஆம் திகதி காலி முகத்திடல் போராட்டத்தில் சந்தேக நபர் மேலும் இரு நண்பர்களுடன் கலந்து கொண்டு, பின்னர் ஜனாதிபதியின் அதிகாரபூர்வ இல்லத்தில் இருந்து பியர் போத்தல் ஒன்றை எடுத்து, அங்கிருந்த கிளாஸ்களில் ஊற்றி அருந்தியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்பின்னர், அவர் குறித்த பியர் கிளாஸை தனது வீட்டுக்கு எடுத்துச் சென்றார்.

ஜனாதிபதியின் இல்லத்தில் பியர் கிளாஸ்/டன் நண்பர்களோடு எடுத்துக்கொண்ட ஒளிப்படத்தை இந்த நபர் தனது தனிப்பட்ட முகநூல் கணக்கில் பதிவிட்டிருந்ததாகவும் பொலிஸார் கூறினர். (அ)

## சர்வகட்சி...

சர்வகட்சி அரசு தொடர்பில் இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது. சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே மைத்திரிபால சிறிசேன இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்துடன், டலஸ் அழகப்பெரும தலைமையிலான அணியினரும் ஜனாதிபதியை நேற்று சந்தித்து, சர்வகட்சி அரசு சம்பந்தமாக பேச்சு நடத்தினர். (அ)

## மனித...

வலியுறுத்தியுள்ளார்.

ஜோசப் ஸ்டாலின் போன்ற மனித உரிமை பாதுகாவலர்களின் பணி சமீபத்திய வாரங்களில் முன்னெப்போதையும் விட முக்கியமானது என்றும் லோலர் கூறியுள்ளார். (அ)

## தனக்கு...

அண்மையில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி தெரிவுக்கான வாக்குப்பதிவின்போது தனக்கு எதிராக வாக்களித்தவர்களைப் பதவிகளிலிருந்து அகற்ற ரணில் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் தனக்கு எதிரானவர்களை ரணில் இனங்கண்டுள்ளார். அவர்களை கட்சியில் இருந்து பின்னடைவு அடையச் செய்யும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் பொதுஜன பெரமுன கட்சி குழுவினர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போது இது தொடர்பான தகவல் வெளியாகி உள்ளது.

மாவட்ட மட்டத்திலான ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஊடாக முன்னெடுக்கப்படும் ஆட்சித் திட்டத்திற்கு உடன்படாத அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுத் தலைவர் பதவிகளில் இருந்து நீக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

இதன் முதற்கட்டமாக கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக இருக்கும் வசந்த யாப்பா பண்டாரவை நீக்கி கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக ராஜபக்ஷவுக்கு அப்பதவியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

## 11ஆம் திகதி...

யுள்ளது.

அதன் பின்னர் அவர் இலங்கை திரும்புவார் என எதிர்பார்க்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் நாடு திரும்பியவுடன், மிரிஹானவில் உள்ள அவரது தனிப்பட்ட இல்லத்துக்குத் திரும்புவார் என நம்பப்படுகிறது.

நாடு திரும்பும் கோட்டாபய, சிறிது காலத்தின் பின்னர் மீண்டும் தீவிர அரசியலுக்கு வருவதா, இல்லையா என்பது குறித்து அவரது நெருங்கிய உறவினர்களுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை, கோட்டாபய மீண்டும் நாடு திரும்புவதற்கான சரியான நேரம் இதுவல்ல என, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## பருப்பு, சீனி,...

330 ரூபாயாக இருந்த சீனியின் மொத்த விலை 270 ரூபாயாகவும், 215 ரூபாவாக இருந்த உருளைக்கிழங்கின் மொத்த விலை 150 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

600 ரூபாவாக இருந்த வெங்காயத்தின் மொத்த விலை 420 ரூபாவாகவும், 1900 ரூபாவாக இருந்த மிளகாய் விலை 1300 ஆகவும் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

டொலரின் ஸ்திரத்தன்மை மற்றும் வங்கிகள் டொலர்களை வழங்குவதால் அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## இலங்கையின்...

மற்றும் அரசியல் நிலைமைகள் குறித்து விவாதித்ததாக பிளின்கன் ருவீட் செய்துள்ளார்.

கம்போடியாவில் உள்ள நாம்பென் நகரில் அமெரிக்க - ஆசியான் அமைச்சர்கள் கிழக்கு ஆசிய உச்சி மாநாடு வெளியுறவு அமைச்சர்கள் மற்றும் ஆசியான் பிராந்திய மன்றம் ஆகிய கூட்டங்களின் புறம்பாக இந்த சந்திப்பு நடந்தது.

இதற்கிடையில் பிளிங்கன் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்த சந்திப்பில் இலங்கை சவால் மற்றும் நெருக்கடியான தருணத்தில் இருப்பதாகவும் ஆனால் இன்னும் ஜனநாயகம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய அரசாங்கத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் பிளிங்கன் கூறியுள்ளார். (அ)

ஈழநாடு Eelanadu

# மின்சார அடுப்பை பாவித்த தாய் மீது மகன் தாக்குதல்!

*கொழும்பு, ஓக. 05*

*பேருவளை மஹகொட பிரதேசத்தில் சமையலுக்கு மின்சார அடுப்பை பயன்படுத்தியதற்காக 75 வயது தாயை 31 வயதான அவரது மகன் தாக்கியதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.*

*தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த தாயார், களுத்துறை நாகொட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

*தாயை தாக்கியதாக கூறப்படும் அவரது 31 வயது சந்தேக நபரான மகன் கைது செய்யப்பட்டுள்ளதாக பேருவளை பொலிஸார் கூறினர்.*

*பேருவளை பொலிஸ் அதிகாரி ஒருவர் சம்பவம் தொடர்பில் வாக்கு மூலம் பதிவு செய்வதற்காக களுத்துறை நாகொட மருத்துவமனைக்கு சென்றிருந்தபோது, அந்தப் பெண் மின்சார கட்டணத்துக்கான தொகையைத் தானே செலுத்தி வருவதாகவும், மின்சார பாவனைக்காக தன்னை மகன் தாக்கியதற்கான காரணம்தான் புரியவில்லை என்றும் பொலிஸ் அதிகாரியிடம் தெரிவித்துள்ளார். (அ)*




# பிள்ளையான் எம். பியின் தந்தை காலமானார்!

*மட்டக்களப்பு, ஓக. 05*

*தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரான பிள்ளையான் என்று அறியப்பட்ட சி. சந்திரகாந்தன் எம். பியின் தந்தை சந்திரகாந்தன் நேற்று முன்தினம் காலமானார்.*

*கோறளைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமாவார்.*

*நேற்று முன்தினம் அவரின் இறுதிக் கிரியைகள் இடம்பெற்றது. இதில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சீ. யோகேஸ்வரன், மட்டக்களப்பு மாநகர முதல்வர் சரவணபவன், முன்னாள் கிழக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் இந்திரகுமார் - பிரசன்னா மற்றும் பல அரசியல் பிரமுகர்கள் பங்கேற்றனர். (ஐ)*

# மரண அறிவித்தல்

## பாலேந்திரன் கந்தசாமி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27.01.1956 | 01.08.2022 |

கொழும்பைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட பாலேந்திரன் கந்தசாமி அவர்கள் 01.08.2022 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி, சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும், வச்சிரலிங்கம் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும்,வரதேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், கிருபாகர், கிருத்திகா, பிரதாப் ஆகியோரின் அன்புத் தந்தையும், நித்தியானந்தன், சுஜாதா ஆகியோரின் அன்பு மாமனாரும்,சபரீஷ், திலானா, நித்தீஸ், சகான், அருஷன், அபிஷனன், டியடிய கிருத்திகா, ஆகியோரின் பாசமிகு பேரனும், நாகேஸ்வரி, விஜியா, மங்கா, காலஞ்சென்ற சிறிபத்மநாதன், திருநாவுக்கரசு, தனபாலசிங்கம், புஷ்பா ஆகியோரின் அன்புச் சகோதரரும்,சிவமணி, சந்திரசேகர், சத்தியலிங்கம், சாந்தலிங்கம், ரூபலிங்கம், சசிகலா, புவனேஸ்வரி, காலஞ்சென்ற சாமவதி, இராசதுறை, கதிரமலை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

பார்வைக்கு

Saturday, 06 Aug 2022 5:00 PM - 9:00 PM, Sunday, 07 Aug 2022 12:30 PM - 2:00 PM, Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை

Sunday, 07 Aug 2022 2:00 PM - 3:30 PM, Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம்

Sunday, 07 Aug 2022 4:00 PM, Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**பிரதாப் - மகன்** Mobile : +16474702429
**நித்தி - மருமகன்** Mobile : +16476868999

தகவல்:
**நித்தி - மருமகன்.**

# 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**தோற்றம்** 23 . 12 . 1923



**மறைவு** 16 . 08 . 2010

## சண்முகம் விஸ்வநாதர் முருகேசு

**'SVM' என்ற மூன்றெழுத்தால்**
**எவ்வுலகிலும் அறியப்பெற்ற ஏந்தலே!**
**ஆண்டுகள் பன்னிரண்டு ஆனாலும்**
**ஐயா! உங்கள் நினைவிலேயே நாமின்றும்!**

**தமிழினத்தின் அடையாளமாய்**
**காரைநகரின் நிமிர்வாய்**
**வர்த்தக உலகில் வைரமாய்**
**அற உலகின் ஆணி வேராய்**
**ஆன்மீக உலகின் காவலனாய்**
**உழைப்பில் ஓங்கிய வடிவமாய்**
**யாழ்ப்பாணத்தின் பொருளாதார**
**அடையாளமாய் விளங்கிய SVM மூன்றெழுத்தே!**

**வழமோங்க வாழ வழிசெய்த**
**வள்ளலே உங்கள் வழி நிற்போம்!**


**S.V.M (PVT) LTD -** 122, Damstreet, Colombo-12.
**SVMURUGESU-** 154, Hospital Road, Jaffna.
**SVMURUGESU ( PVT) LTD -**106, Hospital Road, Jaffna.
**S.V.M. DISTRIBUTORS ( PVT) LTD**
160, Standely Road, Jaffna.
**SVM FUEL MART**
173, 175, Palaly Road, Thirunelvely, Jaffna.
**S.V.M. ENTERPRISE (PVT) LTD**
288, A9 Road, Karadipokku, Killinochi.

தகவல்:
**உரிமையாளரும்,**
**பணியாளர்களும்.**
**(077) 732 5418**

# நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த திருவிழாவையொட்டி ஓம் ரிவி நடாத்தும்

## சைவம் தழைத்தோங்க....
### சமய அறிவுப் போட்டி

நல்லூர் உற்சவகாலத்தை ஒட்டி டான் குழுமத்தின் ஓம் தொலைக்காட்சியால் சைவம் தழைத்தோங்க.... என்ற தொனிப்பொருளிலான நிகழ்வுகள் இவ்வாண்டும் முன்னெடுக்கப்படவுள்ளன. பாடசாலை மாணவர்களின் சைவசமய அறிவை மேம்படுத்தும் நோக்குடன் இவ்வாண்டு 'சைவக்களஞ்சியம்' என்ற தலைப்பிலான – சமய அறிவுப் போட்டி முன்னெடுக்கப்படவுள்ளது.



**செந்தமிழ் சொல்லருவி**
**ச. லலீசன் நடாத்தும்**
**சமய அறிவுப்போட்டி**
**ஆலய வடகிழக்கு வீதியில்**
**அமைந்திருக்கும்**
**நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் தினமும்**
**மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும்.**



## போட்டி தொடர்பான விதி முறைகள்

பாடசாலை மாணவர் மாத்திரமே போட்டியில் பங்கேற்கலாம்.

கேள்விகள் சைவசமய அறிவு சார்ந்த விடயங்களாகவும் பொதுவான அறிகை சார்ந்ததாகவும் இருக்கும்

வினாக்கள் பெரும்பாலும் தரம் 06 – தரம் 11 சைவநெறி பாடநூலை மையப்படுத்தியதாக அமையும்.

விடை வழங்குவதற்கு 10 செக்கன்கள் அவகாசம் வழங்கப்படும்.

நடுவரின் தீர்ப்பே இறுதியானது

போட்டிகளில் பங்கு கொள்ளவிரும்பும் மாணவர்கள் நிகழ்ச்சி நடைபெறும் மண்டபத்திற்கு நேரடியாக வந்து கலந்துகொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு: 075 3132 804**

*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*